# தென்மொழி

சுவடி: 7.

ஓலை: 12.

விலை

75 காசு



## அன்புத் தமிழனே!

அன்புத் தமிழனே! அடிமைப் பிறவியே!
என்பு நெகிழ இதைஉரைக் கின்றேன்;
சற்றே உன்செவி சாய்த்துக் கேட்பாய்.
முற்றும் எண்ணுவாய்; முடிவொன்று காண்பாய்!

எத்தனைக் காலம்–நீ இழிந்து கிடப்பது?
புத்தனைக் கண்டாய்; ஏசுவைப் பற்றினாய்!
சிவனியம் புகுந்தாய்; மாலியந் தழுவினாய்!
மொட்டைத் தலைக்கொரு மூடு கவிழ்த்து
முகமதி யன்என முழுப்பெயர் மாற்றினாய்!
ஊர்விட் டோடினாய்; உலகெலாம் பரந்தாய்;
மலையமும் இலங்கையும் நிலையிலா தோடினாய்!
அலையா யலைந்தாய்; ஆக்கமுந் தேடினாய்.

ஆயினும் நீயோர் ஆரிய அடிமையே!
நாயினும் புழுவினும் நலியும் பிறவியே!
முழுமையாய் நீஒரு மூடக் களஞ்சியம்.
பழமைச் சடங்கின் குப்பைக் குழி,நீ!

வெள்ளைக் காரனின் விளங்கிய அறிவு
கொள்ளை கொள்ளையாய்க் குவிதலைக் கண்டும்,–
மண்ணிலும் விண்ணிலும் மற்றைய துறையிலும்
திண்ணிய ஆய்வினில் தேர்ந்ததை அறிந்தும்–
உன்னை ஒருபடி உயர்த்திக் கொள்ள
எண்ணம் இன்றி இருக்கின் றாயே!

இன்னமும் பார்ப்பான் எழுதிய பொய்யையும்
பின்னி யுரைத்த புராணப் புளுகையும்
உண்மை என்றே உளமார நம்பிப்
பொன்னையும் பொருளையும் கொட்டிக் கொடுப்பாய்!
பார்ப்பான் காலில் பதவிக்கு விழுவாய்;
ஊர்க்குள் அவனையே உயர்த்தி என்கிறாய்!
குலச்செருக் கின்னும் குலைந்திட வில்லை.
பலவேறு சமயமும் உனைப்பாழ் படுத்திடும்.
உள்ளத் திறைவனை ஒப்பாது, பார்ப்பான்
கள்ளத்துத் தோற்றிய கயவருக் கெல்லாம்
படிவம் சமைத்து, விழா பல வெடுப்பாய்!
விடிவிலா இருளுள் விழுந்து கிடப்பாய்!
இனமும் மொழியும் வழியும் கெட்டு
மனமும் கெட்டு மழுங்கினாய் தமிழா!

இனியா கிலும்விழி; இழிவை அகற்று!
பனியும் மழையும் வெயிலும் பாராது
கடமையைச் செய்நீ! மடமையை உதறு!
உடைமையை நீபெறும் நாளுமொன் றுண்டே!

தனித்தமிழ் இலக்கியத் திங்களிதழ்

www.thamizham.net - Free E book No 7422

# நமக்கு வந்த மடல்கள்.

0 175: பெருமதிப்பிற்குரிய ஐயா, தங்களின் தணிப்பரிதாம் துன்பத்தைச் சென்ற தென்மொழியில் வெளிப்படுத்தியிருந்தீர்கள். தமிழ் வளர்த்த (இடையில் கெடுத்த) மதுரையில் வணிகப் பலகையில் மட்டுமே கலப்புநிலை என்று கொள்வதினும் மதுரையே கலப்பு நகர் என்பதைத் தாங்கள் அறிவீர்கள். இங்குள்ள தமிழ் அறிஞர்கள், பேராசிரியர்கள், ஆசிரியர்கள் அனைவருமே மொழித்தொண்டில் கலப்பு இனமே. மொழியின் பெருமையும் தூய்மையும் காக்கப்பட வேண்டும் என்ற கொள்கையுடையோர் எண்ணிக்கையில் மிகச்சிலரே. மதுரைத் தமிழ் மாறுவதோடு மதுரைத் தமிழ் அறிஞர்களும் மாற வேண்டியிருக்கின்றனர். அன்றே தமிழின் துன்பம் தணிப்பதற் கெளிதாகும். எங்களின் புறக்கண்கள் மட்டுமே கண்டு கொண் டிருந்த மதுரையின் வணிகப் பலகைகளைத் தங்களின் அகக்கண்கள் கண்டு அறிவுறுத்தியமைக்கு நன்றியுடையோம்.

—இரா. அரசு, க. மு., தலைவர், மதுரைமாவட்ட, உ. த. கழகம்.

0 176: மதுரையிலே தமிழ்தானில்லை, என்ற ஆசிரியவுரை உள்ளத்தைத் தொடுகிறது. அருமையான கருத்துவிளக்கம், தமிழில் எழுதப் படிக்கமட்டுமே தெரிந்தவன் நான். இலக்கண இலக்கிய அறிவு சிறிதும் அற்றவன். ஆனால் அன்னைத் தமிழைக் கலப்பட மின்றி யாவரும் எழுதவும் பேசவும் வேண்டும் என்ற அவா உடைய வன். எனவே தென்மொழிக்கு அனைத்து ஆக்கமும் தர, பல ஆண்டு களாக இயன்ற அளவு முயற்சியுடன் செயல்பட்டு வருகின்றேன்.

—பெ. முத்துசாமி, நாமக்கல்.

0 177: தென்மொழியும், தமிழ்ச்சிட்டும் மிக்க காலந்தாழ்த்து வருதல் கண்டு உள்ளங் கலங்குகின்றேன். தமிழனுக்கு ஒரே வழி காட்டியாக உள்ள தென்மொழியை நிறுத்தி விடாதீர்கள். ஏனெனில் தென்மொழி ஒன்றுதான் தமிழனின் விழிப்புணர்ச்சிக்கு அடிகோலி வருகிறது. தென்மொழி எவ்வளவு பெரிய எதிர்ப்புகளை யெல்லாம் தாங்கவேண்டி யிருக்கிறது என்பதைத் தெள்ளென உணர்கின்றோம்.

தமிழ்க்காப்பாளர்கள் என்று சொல்லிக்கொள்பவர்களின் சூழ்ச்சி களையும் வென்றன்றோ, தென்மொழி நடையிட வேண்டியிருக்கிறது என்று எண்ணும்போது மனம் மிகவும் கவலையுறுகின்றது. தமி ழர்கள் உய்ய வேண்டுமானால் தென்மொழி வளரவேண்டும். தென் மொழி வளரத் தென்மொழி அன்பர்கள் எந்த ஈகமும் செய்ய அணிய மாயுள்ளனர். தென்மொழி வளர்ந்து தமிழர்கள் வாழ வழிவகுப்பது உறுதி. அந்த நாள் விரைவில் வர உழைப்பது தென்மொழியன்பர் களின் கடன். வாழ்க தமிழ்! வளர்க தென்மொழி!

—தமிழரசன், திருப்பத்தூர்

0 178: புரட்சி என்ற பெயரில் பொய்ச்சரக்கு; கலையென்ற பெயரில் காமக்கதைகள்; குடும்பம் என்ற பெயரில் இழிதகை நடிகை யர் வரலாறு; அரசியல் என்ற பெயரில் அடிமட்டக் கருத்துரைகள். இவ்வாறெல்லாம் வெளிவந்து கொண்டிருக்கும் ஏடுகள்தாம் இன்று

(தொடர்ச்சி 3.ஆம் அட்டைப்பக்கம்)

www.thamizham.net - Free E book No 7422



தென்மொழி

"கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை" எனவே தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை உலகில் எவரும் எதிர்நின்றே!

சுவடி 7: ஓலை: 12

(சுறவம் தி. பி. ௨00௧-டிசம்பர்-69 சனவரி.-1970)
பொறுப்பாசிரியர்: பெருஞ்சித்திரன்.
தென்மொழி மின் அச்சகம், கடலூர்-1.

# அந்தோ! வெங்காலூர்த் தமிழர் படும்பாடு!



கி. மு. எ-ஆம் நூற்றாண்டினரான தொல்காப்பியர் காலத்தில்,

"வடவேங்கடம் தென்குமரி
ஆயிடைத்
தமிழ்கூறும் நல்லுலகத்து"

என்று வேங்கடமலைக்கு அல்லது வேங்கடக் கோட்டத்தின் வடவெல்லைக்குத் தெற்கிலுள்ள நிலமெல்லாம் தமிழ்நாடெனக் குறிக்கப்பட்டது. அதற்குட்பட்டதே வெங்காலூர் (Bangalore).

"கொங்கணக் கூத்தரும் கொடுங்கரு நாடரும்"
"கோற்றொடி மாதரொடு குடகர் தோன்ற"

www.thamizham.net - Free E book No 7422

என்னும் சிலப்பதிகார அடிகளால், கி. பி. 2-ஆம் நூற்றாண்டில் கருநாடு (கருநாடகம்), குடகு என்பன மொழிப்பெயராகவன்றி நாட்டுப் பெயராகவே வழங்கியமை அறியப்படும்.

கி. பி. எ-ஆம் நூற்றாண்டினரான குமாரிலபட்டர் தமிழையும் திரவிட மொழிகளையும் 'ஆந்திர திராவிட பாஷா' என்று தொகுத்துச் சுட்டியதால், அவர் காலத்திலும் கருநாடகமொழி தனிமொழியாகப் பிரியாது தெலுங்கில் அடக்கப்பட்டிருந்தமை தெளிவாம்.

எல்லா வகையிலும் தமிழிலக்கியத்திற்கு மிகமிகத் தாழ்ந்த கன்னட இலக்கியமும் கி. பி க-ஆம் நூற்றாண்டிற்குப் பிற்பட்டதே.

தொல்காப்பியக் கிளவியாக்க ருக-ஆம் நூற்பாவுரையில், இளம்பூரணர், சேனாவரையர், நச்சினார்க்கினியர், கல்லாடர் முதலிய உரையாசிரியர் காட்டியிருக்கும்

> "வடுகர் அருவாளர் வான்கரு நாடர்
> சுடுகாடு பேயெருமை யென்றிவை யாறுங்
> குறுகா ரறிவுடை யார்."

என்னும் பழைய மேற்கோட்செய்யுளும், "கொடுங்கருநாடரும்" என்னும் இளங்கோவடிகள் குறிப்பும், "இதெல்லாம் பழைய கருநாடகம்" என்னும் வழக்கும், பண்டைக் கருநாடக மாந்தரின் நிலைமையை உணர்த்தும். மேனாடுகளுள் இங்கிலாந்து ஏனையவற்றினும் நாகரிகப் பண்பாட்டில் ஏற்றமாயிருந்தது போன்றே, தமிழகமும் கீழ்நாடுகளுள் தலைசிறந்தமை "தமிழ் கூறும் நல்லுலகம்" என்னும் பனம்பாரனார் கூற்றால் விளங்கும். தமிழ் நாகரிகத்தின் தனிநாயகத் தன்மையே "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்னும் பொன்னெறி மொழியைத் தோற்றுவித்தது. இந்நெறிமொழிப்படியே, தமிழர் வெங்காலூரில் அண்மைக் காலம்வரை அகமகிழ்ந்து வாழ்ந்து வந்தனர். ஆயின், இன்றோ வரலாற்றறிவும் பண்பாட்டியல்பும் இல்லாத சில கன்னடக் கயவரால் அந்நிலைமை கெட்டுள்ளது.

ககூருசு (1956)-ஆம் ஆண்டு மொழிவாரி மாநிலப்பிரிவு ஏற்பட்டதிலிருந்து கடந்த 13 ஆண்டுக்காலமாக, கோவை மாவட்டக் கோபி வட்டத் தாளவாடிக் கூற்றம் தமிழ்நாட்டின் ஒரு பகுதியாக இருந்து வருகின்றது. அதன் குடிவாணர்க்கு வேண்டிய தேவைப் பொருள்களும் வாழ்க்கையேந்துகளும் தரப்பட்டும் ஏற்பாடாகியும் வருகின்றன.

இந்நிலையில், வெங்காலூர்ச் சட்டப்பேரவையைச் சேர்ந்த வாத்தல் நாகராசு என்னும் தான்றோன்றிச் சிறு தலைவர், பெயர் பெறுதற்கும் மறுதேர்தலில் வெற்றியுறுதற்கும் திட்டமிட்டுக் குறும்புத்தனமாக

www.thamizham.net - Free E book No 7422

ஊர்காவலர் தடையுத்தரவை மீறித் தாளவாடி புகுந்து. அதைக் கன்னடநாட்டொடு சேர்க்க வேண்டுமென்று கிளர்ச்சி செய்யுமாறு அங்குள்ள கன்னடியரைத் தூண்டி, சட்டப்படி தகைக்கப்பட்டுச் சிறையி லிடப்பட்டார். உடனே அவரைச் சேர்ந்த எதிர்க்கட்சியார் மைசூர் நாட்டுச் சட்டப் பேரவையில் திரும்பைத் தூக்கிப் பேராரவாரஞ் செய்தனர். இதைத் தூண்டுதலாகவுந் துணையாகவுங் கொண்டு, வாத்தல் நாகராசு என்பவரைத் தலைவராகக் கொண்ட கிளர்ச்சிக் காரர் ஆயிரவர், வெங்காலூர்ப் பெருந்தெருக்களும் ஆவண (கடைத் தெரு) மறுகு (வீதி) வழியாகவும், தங்கள் தலைவரை உடனே விடுதலை செய்யவேண்டுமென்று கத்திக்கொண்டு சென்று, கன்னடப் பொது மக்கள் அங்குள்ள களங்கமற்ற தமிழரைத் தாக்குமாறு ஏவாமல் ஏவி னர். அதன் விளைவாக, மறுநாளே மதுரையினின்று சுற்றுலாச் சென்ற தமிழ்உழவர் கூட்டம் வெங்காலூரில் கன்னடியரால் வன்மையாகத் தாக்கப்பட்டு, ஊர்காவலர் துணையால் உயிர்தப்பி உடனே கன்னட நாட்டைவிட்டு வெளியேற நேர்ந்தது. அதன்பின் தொடர்ந்து பல நாள் அங்குள்ள தமிழர் கன்னடக் கயவரின் கொள்ளைக்கும் தீவைப் பிற்கும் குத்திற்கும் வெட்டிற்கும் ஆளாயினர்.

திரு. வாத்தல் நாகராசு தகைக்கப்பட்ட செய்தி கேட்டவுடன் அவரை விடுதலை செய்யுமாறு மைசூர் முதலமைச்சர் திரு. வீரேந்திரப் பட்டீல், தமிழ்நாட்டு முதலமைச்சர் திரு. கருணாநிதியார்க்குத் தொலை வரி யடித்தார். திரு. கருணாநிதியாரும் வாழ்நாள் தண்டனைக்கேதுவான குற்ற வழக்கை நீக்கித் திரு. வாத்தல் நாகராசை மணமகனை அனுப்பி வைப்பதுபோல் மதிப்பாக இன்னியங்கியிற் கொண்டுபோய் அவரில்லஞ் சேர்க்குமாறு, கோவைத் தண்டலாளர்க்கு உடனே உத்திர விட்டு விட்டார். அதன் நிறைவேற்றம் திரு. வாத்தல் நாகராசையும் அவரால் ஏவப்பட்ட கன்னடக் குண்டரையும் திருத்துவதற்கு மாறாக, அவர் முன்னிலும் பன்மடங்கு தமிழரை இழிக்கவும் பழிக்கவும் அழிக்க வும் ஒழிக்கவுமே தூண்டிவிட்டது.

'பெப்பிரவரி' 4-ஆம் நாள் கன்னடநாட்டு முதலமைச்சர், அங்குள்ள தமிழர்க்குக் கன்னடர்க்குப்போன்றே முழுப்பாதுகாப்பும் அளிக் கப்படுமென்றும், முன்போல் தீங்கு இனி ஒருபோதும் நேராதென்றும், உறுதியளித்தார். ஆயின், அது சொல்லளவிலன்றிச் செயலளவி லில்லை. முன்பு வெளிப்படையாக நிகழ்ந்த அட்டூழியங்களெல்லாம், இன்றும், துணையற்ற நிலையிலும் இராக்காலத்தும் மறைமுகமாக நடந்து கொண்டுதான் இருக்கின்றன.

தொலைபேசிநிலைய ஊழியர் இரவில் வேலைக்குச் சென்றாலும் வேலைமுடிந்து வீடு திரும்பினாலும் தனித்த நிலையிற் கத்திக்குத்து, இராக்


www.thamizham.net - Free E book No 7422

காலத்தில் வீட்டிற்குள் படுத்திருந்தால் வெளியே தீவைப்பு. வெளியே படுத்திருந்தால் கத்திக்குத்து. தனிப்பட்ட கடைகளில் இரவும் பகலும் கொள்ளையடிப்பு. திரு. பழனி என்பவர் முதலமைச்சர் காப்புறுதிகூறிப் பன்னாட்குப் பின்னரே மண்டையில் வெட்டப்பட்டார். அடியுண்டபேர், பற்பலர். அவருள் தன்மானமுள்ளவர் தாம் பட்டதை வெளிப்படுத்தவில்லை.

கன்னடநாட்டு முதலமைச்சர் வருகின்ற பொதுத்தேர்தல் விளைவு நோக்கிக் கயவரையுங் குண்டரையும் கட்டுப்படுத்த வியலாத நிலைமையிருப்பதாகத் தோன்றுகின்றது.

கன்னடக் கிளர்ச்சியாளர் என்றும், கன்னடசேனை என்றும், கன்னடநாட்டு எல்லைப்புறக் கிளர்ச்சிக் கூட்டம் என்றும், பல்வேறு கன்னட இனமொழி நாட்டுவெறியாளர் அமைப்புக்கள் இருக்கின்றன. அதனால், இதுவரை கன்னடர் எவருக்கும் எட்டுணைச் சேதமும் விளைந்ததில்லை. ஆயின், தமிழரோ பல்வகையில் அல்லற்பட்டதுடன், இரவும் பகலும் அமைதியின்றி அச்சத்துடன் வாழ்ந்து வருகின்றனர். அவருள் பெரும்பாலார் தி. மு. க. கட்சியினராயிருந்தும், அதுநோக்கியேனும் இற்றைத் தமிழ்நாட்டரசு அவர்க்குப் பாதுகாப்பளிக்க முன்வரவில்லை. மதுரையிலுள்ள தமிழர்படையும் அவர் வேண்டுகோளைப் புறக்கணித்துவிட்டது. அண்மையில் வெங்காலூர்த் தமிழ்ச்சங்கக் கட்டடத் திறப்பிற்குச் சென்ற ஒரு பெருந்தமிழ்ப் பேராசிரியரும் இச் செய்தி பற்றி ஒன்றும் சொல்லவில்லை. திரு. வாத்தல் நாகராசு தமிழர் சேனையைக் கலைக்குமாறு எச்சரிக்கின்றார். கன்னட சேனை தமிழரை அடங்கி நடக்குமாறு அச்சுறுத்துகின்றது. ஈழத்திலும் கடாரத்திலும் மலையாவிலும் தமிழன் வெளியேற்றப்பட்டதற்குமேல் வெங்காலூரினின்றும் வெளியேற வேண்டுமோ? மானங்கெட்ட மழுங்கல் தமிழா! இனியாகிலும் விழித்தெழுந்து இனத்தைக்கா.

“வேளாண்மை செய்து விருந்தோம்பி வெஞ்சமத்து
வாளாண்மை யாலும் வலியராய்த்—தாளாண்மை
தாழ்க்கு மடிகோ ளிலராய் வருந்தாதார்
வாழ்க்கை திருந்துத லின்று.” —பழமொழி, ௪௫௪.



# An Open Letter.

From

G. Devaneyan, M.A., B.O.L.,
President,
The Internatinal Tamil League,
Tamil Nadu.

To

The Hon'ble
Mr. Veerendra Patil,
Chief Minister of Mysore,
Secretariat, Bangalore.

Dear Sir,

You might have already received a complimentary copy of my publication entitled 'The Primary Classical Language of the World', the purpose of sending which is to persuade you to take such steps as to restore and foster cordial relations of a permanent nature, between the Kannadigas and the Tamilians employed or living in your State, by creating a favourable impression on your mind about the greatness and importance of Tamil, and by apprising you of the real nature of the relationship between Tamil and Kannada.

The Kannadigas as well as the Telugus and the Keralites, are, as you know, very close to the Tamils not only geographically but also linguistically. But the fact, that the Lemurian Tamil was the parent of all the Dravidian languages, is unfortunately still unknown not only to the Dravidians (non-Tamilians) but also to the majority of the Tamilians, a few of whom are even top-ranking Tamil professors!

Dr. Caldwell, the most distinguished investigator of Dravidian Philology, though living at a time when Tolkappiyam, the most ancient Tamil grammar extant, together with the whole body of the so-called 'Sangam Literature' had gone underground, and there was no native Tamil scholar of the type of the late Maraimalai Adigal, the Reviver of Pure Tamil, to guide him and convince him of the

www.thamizham.net - Free E book No 7422

Lemurian origin of Tamil, had such a clear perception of the anteriority and superiority of Tamil, as to aver in his 'Comparative Grammar of the Dravidian or South Indian Family of Languages' in the following manner.

"Whilst the grammatical structure of each Dravidian language and dialect will be investigated and illustrated in a greater and less degree, in proportion to its importance and to the writer's acquaintance with it, it will be his special and constant aim to throw light upon the structure of Tamil—a language which he has for more than thirty-seven years studied and used in the prosecution of his missionary labours, and which is probably the earliest cultivated, and the most highly developed, of the Dravidian languages—in many respects the representative language of the family,"

—Third Edition (reprinted by the University of Madras), -p. 1.

"Tamil—This language being probably the earliest cultivated of all the Dravidian idioms; the most copious and that which contains the largest portion and the richest variety of indubitably ancient forms, it is deservedly placed at the head of the list.

—Do.-p. 6.

"It is true it would now be difficult for Telugu to dispense with its Sanskrit, more so for Canarese, and most of all for Malayalam—those languages having borrowed from Sanskrit so largely, and being so habituated to look up to it for help, that it would be scarcely possible for them now to assert their independence. But Tamil, the most highly cultivated ab intra of all Dravidian idioms, can dispense with its Sanskrit altogether, if need be, ant not only stand alone but flourish without its aid." —Do.-p. 45.

www.thamizham.net - Free E book No 7422

"Nothing strikes a Tamil Scholar more, on examining the dictionaries of the other Dravidian dialects, than the paucity of their lists of synonyms in comparison with those of Tamil. The Tamil vocabulary contains not only those words which may be regarded as appropriate to the language, inasmuch as they are used by Tamil alone, but also those which may be considered as the property of Telugu, Canarese, etc. Thus, the word used for house, in ordinary Tamil is Vidu (வீடு); but the vocabulary contains also and occasionally uses, the word appropriate to Telugu, il (இல்) (Tel. illu) and the distinctive Canarese word manei (மனை)(Can. mane), besides another synonym, kudi (குடி) which it has in common with Sanskrit and the whole of the Finnish languages. The grammar and vocabulary of Tamil are thus to a considerable extent the common repository of Dravidian forms and roots. We may conclude, therefore, that the literary cultivation Tamil dates from a period prior to that of the other idioms and not long subsequent to the final breaking up of the language of the ancient Dravidians into dialects" —Do.-p. 82

I have quoted these passages in the hope, that such information as this may help to incline the hearts of educated Kannadigas at least, to be favourable towards the Tamilian residents in your State.

Even now, most of the Dravidian words are found in their original form only in Tamil, while they have undergone, corruption of varying degrees in the Dravidian languages.

E. g. marramadu (மாற்றமாடு, Tam.) mattadu (மாட்டாடு, Tel.) mattadu மாத்தாடு, (Kan.) to speak, to say.

maru (மாறு, Tam.), to exchange, as words.

maru + am (v. n. suf.) = marram (மாற்றம், Tam.), a word.

adu (ஆடு) is a Tamil auxiliary verb, as in uraiyadu, (உரையாடு) solladu (சொல்லாடு) etc.

www.thamizham.net - Free E book No 7422

marram(மாற்றம்) + kal (கள் pl. suf.) = marrangal (மாற்றங்கள், Tam.), words.

The Tamil word 'marram' corrupts into matta (மாட்ட) in Telugu and mattu (மாத்து) in Kannada, and the Tamil plural suffix 'kal' into 'lu' in Telugu. So, marrangaladu (Tam.) becomes mat-ladu in Telugu. Thus, it will be seen, that the Dravidian languages are indeed much-altered off-shoots of Tamil.

The recent communal disturbances in Bangalore, on impartial analysis, seem to have been sparked off by the unlawful acts of an irresponsible and unbridled Mysore M. L. A.

Independent India, with its adult suffrage exercised by illiterate majority, is highly favourable even for an insignificant independent to become a high flyer and come into undue and undeserved prominence.

The action of Mr. Vatal Nagaraj in defying a police ban in a State other than which he belongs to, and that too in connexion with a border dispute, is a double crime deserving a deterrent punishment. But when the law took its natural course, the opposition in the Mysore Assembly made a great fuss, as if Mr. Vatal Nagaraj was an international figure enjoying extraterritoriality, and sought to raise a discussion in the House on the arrest of the law-breaker through an adjournment motion, and this encouarged about 2000 hot-heads belonging to the organization known as "Kannada Chaluvaligaru" (Kannada Agitators) to go in procession through the main roads of Bangalore demanding immediate and unconditional release of their leader, and thus indirectly instigating the Kannada people to outrage the Tamilian residents and visitors there. Consequently, the very next day, an innocent group of Tamil farmers who went on an agricultural tour of your State was violently attacked by a Kannadiga crowd, 1000 strong, at Malles-

www.thamizham.net - Free E book No 7422

waram in Bangalore, and had to terminate the tour abruptly and get out of the State only with police escort to escape danger. Then the miscreants turned their attention towards the local residential quarters of the Tamilians, and indulged in arson, loot, and stabbing for more than three days.

To understand the gravity of the crime perpetrated by Mr. Vatal Nagaraj, you have only to imagine, what would be your reaction if an immature and self-styled political leader from Maharashtra intruded into Belgaum in your State, and created a similar law and order problem there.

It is indeed to your credit, that you condemned in unequivocal terms the atrocities perpetrated by the Kannada Chalavaligars and their supporters on the Tamilians residing in Bangalore. But it would have been far better, had you prevented the enormous damage and injury by arresting the "annexationist" within your State itself, before he crossed the border into Tamilnadu.

The following statement made by the "Saviour of Talavadi" on the floor of the Mysore Assembly, on the 24th Jan. 1970, reveals not only his inordinate arrogance in equating himself with the Chief Minister of Tamilnadu and assuming sovereign authority over tho state of Mysore, but his mental defect in not distinguishing between a visit and an invasion.

"His visit to Talavadi was similar to various visits of Mr. Karunanidhi to Bangalore at the request of his D. M. K. supporters here. If it was the stand of Mr. Karunanidhi that none from Mysote State should visit his State, then they in Mysore had to organise boycott of any further visits of Mr. Karunanidhi to any place in Mysore State."

www.thamizham.net - Free E book No 7422

This statement was ment to be in reply to Mr. Karunanidhi's warning given in the Tamilnadu Assembly on the 22nd Jan. 1970, in the normal discharge of his duties and in accordance with his party's motto "Duty, Dignity, Discipline." in general terms as follows:—

"Some politicians were reported to have threatened to march into Talavadi and plant some flag on the Panchayat Union Office building,

"My Government will not look on idly with folded hands, should agitators from the neighbouring State attempt to encroach on the border area of Talavadi firka of Gobichettipalayam of Coimbatore district.

"Let nobody imagine that there is no government functioning in this State."

Mr. Karuthiruman, of whose constituency Talavadi forms a part, stated in the Tamilnadu Assembly on the 22nd Jan. 1970, that "Some legislators from across the State border appeared to incite the people through notices to demand transfer of the area;" This was amply proved by Mr. Vatal Nagaraj's own statement made in the Mysore Assembly on the 24th Jan. 1970, that his visit to that area was only to organise a peaceful 'satyagraha' in which the people of Talavadi alone would participate. If participation in the 'satyagraha' was to be confined to Talavadi people, what business had Mr. Vatal Nagaraj to go there and organise it?

His attempt to raise a discussion in the Mysore Assembly through an adjournment motion, on the premonitory statement of Mr. Karunanidhi, which was only of a general nature, betrays his lack of knowledge of politics and parliamentary procedure. Fortunately, Mysore has an impartial and competent Speaker in Mr. S. D. Kothavale.

"The Speaker pointed out, that the adjournment motion of Mr. Nagaraj related to some statements said to have

www.thamizham.net - Free E book No 7422

been made by the Chief Minister in the Tamilnadu Assembly. It was not correct to raise such issues, and discuss anything that had taken place in another State Legislature. While making any reference to such matters, it would not be proper for any member to make comments on the proceedings of another legislature. The issue raised in the motion of Mr. Nagaraj could not form the subject matter of an adnjourment motion for a discussion in the House, and as such he would not allow the motion.' (The Mail, Jan. 25, 1970).

It was very kind of you, that in response to the appeal made by the Tamilnadu Chief Minister on Feb. 2, asking you to take all measures to protect the interests of Tamils in Mysore State, in the wake of the anti-Tamil incidents during the previous few days, you said in a telegram to Mr. Karunanidhi,

"I share your view, that Tamilians in Mysore State and Kannadigas in Tamilnadu should live in harmony as they have done all along", and also assured him that any recrudescence of trouble would be firmly dealt with.

Further, you made a firm assurance on the floor of the Mysore Assembly on the 4th Feb. 1970, that all linguistic groups living in Mysore State, whether majority or minority, would be treated alike, and no one would be exposed to any sort of harassment or handicap under any situation, and added that your Government would consider all those in the State as 'Mysoreans' irrespective of their language and that their safety would be zealously safeguarded.

You expressed regret over violent activities like assaulting of people, looting of shops, and burning of houses and vehicles, and said that such acts of felony had tarnished the fair name of Bangalore, and brought discredit to the entire State. You also hoped that every section of the House would condemn such actions, as no one could tolerate them in the name of language.

www.thamizham.net - Free E book No 7422

You defended the action of the Tamilnadu police by saying, that they remained within their area beyond the borders, and took action when the agitators (Kannadigas) entered their area and broke the prohibitory order.

Indeed we Tamils are immensely pleased with your retrospection that "It should be remembered that there were thousands of Tamil speaking people living in Mysore for ages, and some of them were Dewans, eminent engineers and officers of the government."

But I want to tell you in this context, that you will be quite surprised to know shortly that the Kannadigas are in truth but one class of descendants of the Lemurian Tamils, that the Kannada region formed a part of the Tamil country in the pre-Christian times, that the term Kannada originally signified only a territorial division and not a language, and that the language of the Kannada country began to deviate from Tamil at the commencement of the Christian era, and separated from it only after the 8th century A. D.

The very fact that the initial 'h' of most words in modern Kanarese is an alteration of the Tamil 'p', is a clear proof of the anteriority and originality of Tamil.

Caldwell also says "Another evidence of the antiquity and purity of Tamil consists in the agreement of the ancient Canarese, the ancient Malayalam, the Tulu, and also the Tuda, Gond and Ku, with Tamil, in many of the particulars in which modern Canarese and modern Telugu differ from it." —p. 82.

In pursuance of your policy of treating all residents of your State alike, we gladly note that Mr. Vatal Nagaraj was suspended from the Mysore Assembly for a while, and subsequently prevented from addressing a public meeting for which no license was obtained.

www.thamizham.net - Free E book No 7422

But, all the same, the following press report which appeared in the 'Mail' of 19th Feb. 1970, under the heading 'Anti-Tamil Stir in Mysore' and subheading 'Minorities Council Plea to Govt.' has caused much anxiety and chagrin to us.

"The office-bearers of the newly-constituted State Linguistic Minorities Protection Council along with the local M. L. A.s yesterday visited some of the localities like Selvanagar, Oklipuram, Ramachandrapuram and Brahmanandapuram, which were affected in the recent anti-Tamil stir in the city.

"The Committee later met to review the situation, and felt that in spite of the assurance given by the Chief Minister Mr. Veerandra Patil to the affected people, 'the fear' in their minds of being attacked by hooligans was still there. Hence, it decided to approach the State and the Central governments for adequate 'protection' to those in areas dominated by the non-Kannada speaking population.

"The Committee condemned the 'Senas' since they were detrimental to the promotion of unity in the society.''

We also hear from our friends in Bangalore, that the Tamilians residing there, especially those working in the Telephone Exchange are still liable to violent attack by Kannadiga hooligans, while the former are moving out lonely in the night-time. There is also an unconfirmed report, that an employee of the Telephone Exchange in Bangalore, aged 53 and having 5 children, was in a hospital undergoing treatment for a stab-wound for two months.

If your State has any legitimate claim to any part of Tamilnadu, let it be decided by Constitutional means and not by barbarous outrages and atrocities.

www.thamizham.net - Free E book No 7422

The Kannadigas should take into consideration the magnanimity of our Chief Minister Mr. Karunanidhi. who, immediately on receipt of your telegram, released Mr. V. Nagaraj and sent him by car to Bangalore withdrawing the highly criminal case pending against him. His earnest wish, that Tamilians in Mysore State and Kannadigas in Tamilnadu should live in peace and harmony, should not only be reciprocated but also implemented faithfully.

We, Tamilians, have been exercising self-restraint hitherto. Let it not be mistaken for weakness. "Abused patience turns to fury". The Kannadiga hooligans should know, that all the hotels run byK annadiga capital in Madras are enjoying Tamilian patronage. If violence is to be met with violence, we can also raise a private force. But, let noble qualities prevail against base ones.

More than two months have elapsed. since you gave assurance of complete protection of life and property to the Tamilian residents of your State. But, frequent, preplanned and non-stopping felonious attacks, mostly nocturnal, by the Kannada Chaluvaligars and similar vicious organisations, have driven the Tamilians to the necessity of forming a sena recently, entirely in self-defence, and even to put forward a proposal for municipal bifurcation of Bangalore.

It is only proper that this proposal was strongly condemned by the Bangalore Citizens'Forum and Samithi leaders like Messrs K. M. Naganna and T. R. Shamanna. The feeling of many leading citizens of Bangalore, that such controversies would tarnish the fair name of Bangalore, and that the cosmopolitan character of the city should be maintained, is also genuine and appreciable.

But at the same time, an immediate, permanent, real and inviolable solution also should be found to the problem

www.thamizham.net - Free E book No 7422

of security of Tamilian life and property. The Tamilian residents of Mysore State, particularly of Bangalore, must live in as much peace and safety as the Kannadigas. The former cannot leave Bangalore on any account. If they are forced to leave your State, the same fate will befall the latter in Tamilnadu. It is a pity that the anti-Tamilian Kannada elements do not think for a moment, that what they contemplate to do to the Tamilians will only boomerang upon them.

To restore the cosmopolitan character of Bangalore and the communal harmony that existed between the Kannadigas and the Tamils before the Talavadi incidents, it is imperative that the vandalic Mr. Vatal Nagaraj be bound over at least for five years for good behaviour and to keep the peace, and that the activities of the Karnataka Border Agitation Organisation be kept within bounds. If these two measures are effected, I am sure, there will be no repetition of the trouble, and Bangalore will become again an earthly Paradise for all linguistic communities.

This letter is just to remind you of your solemn responsibility for maintaining the well-being of the linguistic minorities in your State, and no reply is expected.

'Thenmozhi' Power Press,
Cuddalore-1, S. A. Dt.,
8—5—1970.

Yours sincerely,
G. Devaneyan.


## "தென்மொழி"-அரையாண்டுக் கட்டணம்.

அன்பர் பலரது வேண்டுகோளுக்கு இணங்கித் "தென்மொழி"க்கு அரையாண்டுக் கட்டணமுறை பின்வருமாறு வகுக்கப்பட்டுள்ளது. அன்பர்கள் இந் நல்வாய்ப்பைப் பயன்படுத்திக்கொண்டு பேரளவில் உறுப்பினராகி நன்மை அடைவார்களாக.

| உள்நாடு | கொழும்பு | வெளிநாடு |
|---|---|---|
| 5-00 | 6-00 | 7-00 |

அமைச்சர், தென்மொழி.


www.thamizham.net - Free E book No 7422

## தென்மொழிக்கு நன்கொடை.

8–3–69 முதல் 26–4–69 முடிய,

தென்மொழி வளர்ச்சியில் அக்கறையும் ஆர்வமும் கொண்ட அன்பர்கள் விடுத்த நன்கொடைப் பட்டியல் வருமாறு. ஒல்லும் வகையில் அறவினை ஓம்பும் அத்தமிழ் நெஞ்சங்கட்கு நம் நன்றியும் வாழ்த்தும் உரியவாகுக.

| | | | |
|---|---|---|---|
| 1. | Thiru. P. N. Saravanamoorthy, Bangalore. | 5 | 00 |
| 2. | மறைமலையடிகள் மன்றம், பு. புளியம்பட்டி. | 11 | 00 |
| 3. | Thiru. N. D. Thasan, Amristar Cantt. | 5 | 00 |
| 4. | ,, N. Pandiathurai, Sanapadia. | 1 | 50 |
| 5. | திரு. இரா. இராசாராம் சுடலைமுத்து, பாளையங்கோட்டை. | 5 | 00 |
| 6. | திரு. எசு. ஆபிரகாம், மதுரை. | 4 | 00 |
| 7. | திரு. ந. ஆ. அண்ணாமலை, நத்தம். | 10 | 00 |
| 8. | திரு. த. செகந்நாதன், பெரெலி. | 10 | 00 |

## பிழை திருத்தம்

க. ஆசிரியவுரையின் முதற்பத்தியில், தொல்காப் ‒ ......தில் என்று அச்சாகியிருக்குமாயின் 'தொல்காப்பியர் காலத்தில்' எனப் படிக்க.

உ. An Open Letter என்னும் ஆங்கிலக்கட்டுரையில், 10-ஆம் பக்கத்தில் முதல் வரியில் ment என்றிருப்பதை meant எனத் திருத்திக் கொள்க.

அமைச்சர்.

## அறிவிப்பு.

மொழிப்பேரறிஞர் திரு. பாவாணர் அவர்கட்கு மடல் வரைவோரும், உ. த. க. தொடக்கவிழாச் சார்பாக வாழ்த்து வேண்டுவோரும், மறுமொழி விடுத்தற்குப் போதுமான அஞ்சற்றலை உடன் வைத்து அனுப்புமாறு கேட்டுக்கொள்கிறோம். அமைச்சர்.

## நன்கொடைப் பற்றுச்சீட்டு

என் தமிழர் மதம் என்னும் நூல் வெளியீட்டிற்காகத் தண்டப்பட்ட தொகை 3100 (மூவாயிரத்து நூறு) உருபா திரு. முல்லைவாணன் (V. KaliyaperumalI/c. 2061178-B) அவர்களிடமிருந்து, பெருமகிழ்ச்சியொடும் நெஞ்சார்ந்த நன்றி யுணர்ச்சியொடும் இன்று பெற்றுக்கொண்டேன்.

இதற்கு என் கையெழுத்து,

**ஞா. தேவநேயன்,**

*ஆ 1135, 2-ஆம் மேற்குக் குறுக்குச்சாலை,*
*காட்டுப்பாடி விரிவு; வடவார்க்காடு மாவட்டம்,*
*2, மீனம், ௨௦௦க (15–3–1970).*

www.thamizham.net - Free E book No 7422

தொடர்ச்சி-3.

# திருக்குறள் தமிழ் மரபுரைச் சிறப்பு.

-பெருஞ்சித்திரன்.

மேலே கூறப்பட்டவற்றிலிருந்து, தமிழர்க்கும் உலகிற்கும் பொதுவாகச் செய்யப்பெற்ற திருக்குறள் என்னும் ஒப்புயர்வற்ற ஓர் அறநூலைப் பரிமேலழகர் ஒரு குலத்தார்க்கே சார்பானதும் மாந்தர் இனத்திற்கே இழிவு சாற்றுவதும், ஆரிய இனத்திற்கே பெருமை யளிப்பதுமான மனுநூலைப் பின்பற்றி எழுதியதாகக் கருத்துப் புலப் படுமாறு எங்ஙனம் வலிந்தும் நலிந்தும் காட்டியிருக்கின்றார் என்ப தும், அவற்றையெல்லாம் பாவாணர் எங்ஙன் மறுத்துக்கூறி மெய்ம்மையுணர வைத்துள்ளார் என்பதும் புலனுகாமற் போகாது. இனி, பரிமேலழகர் பெருமையுறக்கூறும் மனுநூல் என்பதில் சொல் லப்பெற்ற அறங்கள்தாம் எவை என்று கேட்பார்க்கு ஒருவாறு அறி யக் கூறுவேன்

மனுநூலை முழுமையும் ஒருமுறை மேம்போக்காகப் பார்த்த ஒரு வர்கூட அந்நூல் அறநூல் என்பதை ஒப்பார். இனி, அதிற் கூறப் பெற்றனவும் எல்லாருக்கும் பொதுவாகக் கூறப்பட்டவல்ல என்ப தைப் பள்ளிப்பிள்ளைகளும் எளிதே உணருவர். அதிற் கூறப்பெற்ற நேர்பாடு (நீதி)களுக்குள் சிலவற்றை நடுநிலையாளரும் பொதுமை நோக்கினரும் கண்டு தெளியும் பொருட்டுக் கீழே தருகின்றேன்.

1. நாலாம் வருணத்தார்களாகிய சூத்திரர்களின் (அஃதாவது தமிழர்களின்) ஒழுக்கம் (தருமம்) என்னவென்றால், பிராமணர்களுக்கு (அஃதாவது ஆரியப் பார்ப்பனர்க்கு)ப் பொறுமையின்றிப் பணி விடை செய்வதுவே. (மனு 1-91)

2. பிராமணன் பஞ்சினுலும், சத்திரியன் சணப்பை (சணல்) நூலாலும், வைசியன் வெள்ளாட்டு மயிரினுலும் பூணூல் அணிதல் வேண்டும். (மனு. 2-44)

3. பத்து அகவை யுடையவனுயினும் பிராமணன் தந்தைக்குச் சமமாவான். நூறு அகவை யுடையவனுயினும் சத்திரியன் மகனுக் குச் சமமாவான். ஒரு மகன் ஒரு தந்தைக்குச் செய்யும் கடமையை நூறு அகவைச் சத்திரியன் (அரசன்) ஐந்து அகவையுடைய பிராமண னுக்குச் செய்தல் வேண்டும். (மனு. 2-135)

www.thamizham.net - Free E book No 7422

4. சூத்திரன் துறக்கம் (சுவர்க்கம்) புகவேண்டுமாயினும், வாழ்க்கை நடத்த வேண்டுமாயினும் அல்லது இரண்டிற்குமாயினும் பிராமணனையே தொழல் வேண்டும். இந்தச் சூத்திரன் இன்ன பிராமணனுக்கு அடிமை என்று ஒருவனுக்குப் பெயர் வந்தால் அதுவே அவனுக்கு நற்பேறு. (மனு, 10-122)

5. சூத்திரன் பொருள் ஈட்டுந் திறமையுடையவனாக விருந்தாலும் தன் குடும்பத் தேவைக்கு மிகுதியாகப் பொருளைச் சம்பாதிக்கக் கூடாது. அப்படிச் சம்பாதித்தால் தன்னால் வணங்கத்தக்க பிராமணர்களையே துன்புறுத்தவேண்டி வரும். (மனு. 10-129)

6. பிராமணன் (உடுத்துக் கழித்த) பழைய உடைகள், (உண்டு கழித்த) நொய் முதலிய சாரமில்லாத தவசங்கள், (புழங்கிக்கழித்த) பழைய ஏனங்கள் இவற்றையே தனக்கு அடிமை செய்கிற சூத்திரனுக்கும் அவன் குடும்பத்திற்கும் வாழ்க்கைக்காகக் கொடுக்கவேண்டும். (மனு. 10-125)

7, தாழ்ந்த குலத்தவர்களில் சிலர் இழிந்த (மிலேச்ச) மொழிகள் (அஃதாவது தமிழ் முதலிய திரவிட மொழிகள்) பேசுபவர்களாயும் சிலர் சமற்கிருதம் முதலிய உயர்ந்த மொழி பேசுபவர்களாயும் இருக்கிறார்கள். ஆனாலும் அவர்கள் அனைவரும் ‘தசுயூக்கள்’ (திருடர்கள்) என்றே சொல்லப்படுவார்கள். (மனு. 10-45)

8. இவர்கள் அனைவரும் பட்டணத்திற்கும் ஊருக்கும் வெளியில் மரத்தடி, தோப்பு, சுடுகாட்டிற்கு அருகில் உள்ள மலை, காடுகள் இவற்றில், இவர்கள் இன்னின்ன தொழிலாளிகள் என்று அனைவர்க்கும் தெரியும்படி தம்தம் குலத் தொழில்களைச் செய்து கொண்டு வாழ வேண்டும். (மனு. 10-50)

9. அவர்கள் மாழையால் (உலோகத்தால்) ஆன ஏனங்கள் வைத்திருக்கக்கூடாது. அவர்கள் தொட்ட கலங்களை எவ்வளவு துப்புரவு செய்தாலும் தூய்மையாகாது. அவர்கள் நாய்களையும், கழுதைகளையும் மட்டுமே வளர்க்கக் கடவர்கள். மாடு முதலியவற்றை வைத்துக்கொண்டு வாழ்க்கை நடத்தக்கூடாது. (மனு. 10-51)

10. அவர்கள் பிணத்தின் துணிகளையே உடுக்க வேண்டும். உடைந்த சட்டியில்தான் உண்ணவேண்டும். இரும்பு, பித்தளை முதலிய வற்றால் செய்த நகைகளைத்தான் அணியவேண்டும். அவர்கள் எப்பொழுதும் ஓரிடத்திலிருந்து தொழில் செய்யக்கூடாது. அவர்

www.thamizham.net - Free E book No 7422

களுச்கு ஏதாவது கொடுக்கும் பொழுது அவர்களைப் பார்க்கவும் அவர்களோடு பேசவும் கூடாது. அவர்களுடன் பெண், கடன் கொடுக்கல் வாங்கல் செய்யக்கூடாது. அவர்கள் இரவில் உலவக் கூடாது. அவர்கள் கெட்டிக்காரர்களானாலும் பெற்றோர் தொழிலைத் தவிர வேறு தொழில் செய்து, தங்கள் பிறப்பை மறைத்துக் கொள்ளக்கூடாது. (மனு. 1-250-54)

11. பிராமணன் மூடனாயிருந்தாலும் அவனே மேலான தெய்வம். (மனு. 9-317)

12. சூத்திரன் பிராமணனைத் திட்டினால் அவன் நாக்கை அறுக்கவேண்டும். பெயர், இனம் முதலியவற்றைச் சொல்லி இகழ்ந்தால், அச் சூத்திரன் வாயில் பத்து விரற்கடை நீளமுள்ள எஃகு கம்பியைக் காய்ச்சி எரிய எரிய வைக்க. (மனு. 8-270-71)

13. பிராமணனுக்குச் சூத்திரன் அறத்தைச் சொல்லக் கடவனல்லன். மனச்செருக்குடன் அவ்வாறு சூத்திரன் ஒருவன் பிராமணனுக்கு அறங் கூறுவானானால் அவன் வாயிலும் காதிலும் எண்ணெயைக் காய்ச்சி ஊற்ற வேண்டும். (மனு. 8-272)

14. சூத்திரன் ஒருவனைப் பிராமணன் கொன்று விட்டால் அது பெரிய கரிசு (பாவம்) ஆகாது. ஒரு தவளையைக் கொன்ற கரிசே (பாவமே) வரும். (மனு. 11-131-132)

15 அரசன் மனுநூலில் சொல்லப்பட்டபடி ஆட்சி செய்வதே தவமாகும். பிராமணப் பணிவிடை செய்வதே சூத்திரனுக்குத் தவமாகும். (மனு. 11-285)

16. அரசன் சூத்திரனைப் பிராமணனுக்குப் பணிவிடை செய்யும்படி கட்டளையிட வேண்டும். அவன் மறுத்தால் தண்டிக்க வேண்டும். (மனு. 11-410)

17, சூத்திரன் சம்பாதிக்கும் பொருள் முழுவதும் அவனுடைய தலைவனாகிய பிராமணனுக்கே சேரவேண்டுமே யல்லாது சம்பாதிப்பவனுக்குச் சேரலாகாது (மனு. 9-416)

18. பிராமண குலத்தில் பிறந்தவன் ஒழுக்கமில்லாதவனாயினும் அவன் நடுவனாக அறமன்றங்களில் இருந்து நெறிமுறை கூறலாம். சூத்திரன் ஒருபோதும் நெறிமுறை கூறக்கூடாது. (மனு. 8-20)

www.thamizham.net - Free E book No 7422

–இவ்வாறு கணக்கற்ற உரைகள் கொடுமையானவும், ஒரு குலத்துக்கொரு நெறி சொல்வனவுமாகவே மனுநூல் முழுவதிலும் வருகின்றன. இவை இன்று நடைமுறையில் இல்லை என மறுக்கப்பட்டாலும் திருவள்ளுவர் தம் திருக்குறளை எழுதிய ஈராயிரத்திருநூறு ஆண்டுகளுக்கு முன், பிராமணர்களால் கொண்டுவரப்பெற்றுத் தமிழவரசர் பலராலும் கடைப்பிடிக்கப்பெற்ற நடைமுறை நெறிகளே என்று கருதுமிடத்து, அக்காலத்தில் இவ்வாரியப் பார்ப்பனரால் தமிழ்க்குடி பெற்ற துயரங்கள் எத்துணையளவு மிகுதியாய் இருந்திருத்தல் வேண்டும் என்று அறிவிஞர் உணர்ந்து கொள்க. இனி, இம்மனுநூல் எழுந்தபின் அதுவரைக் கடைப்பிடிக்கப்பெற்று வந்த அனைத்து நெறிமுறைகளும் (அவை முன்னரே எழுதி வைக்கப்பெற்ற 'புராண, இதிகாச'ங்களில் கூறப்பட்டவையாக விருந்தாலும்) பயனற்றவையாகக் கருதப்பட்டு பிராமணருக்கு அனைத்து வகையாலும் ஏற்றம் தரும் அம் மனுநூல் உரைகளே மேலானவை எனப் போற்றப்பெற்று வந்தன. இதற்கு அம் மனுநூலின் முகவுரையே சான்றாக நிற்கின்றது. அதன் தொடக்கத்தில் இவ்வாறு கூறப்பெறுகின்றது. "பதினெட்டு ஸ்மிருதிகளுக்குள் மநுஸ்மிருதிக்கு விரோதமாய் மற்ற பதினேழு ஸ்மிருதிகளும் ஒரே வாக்காய்ச் சொல்லியிருந்தாலும் அது ஒப்புக்கொள்ளத் தக்கதன்று, 'மனுஸ்மிருதிக்கு விரோதமான ஸ்மிருதி புகழையடையாது" (மநுதரும சாஸ்திரம். இராமாநுஜாசாரியார் மொழிபெயர்ப்பு–1934)

இம் மனுநூலைப் பற்றியும் அதிற் கூறப்பெற்றுள்ள அறமல்லாத மறவுரைகள் பற்றியும் ஏன் இவ்வளவு விளக்கமாக இங்குக் குறிப்பிடப் பெறுகின்றது எனில், இம் மனுநூலிற் கூறப்பெற்ற அறவொழுக்கங்களையே திருவள்ளுவர் தம் திருக்குறளில் கூறியுள்ளார் ஈன்னும் ஒரு பச்சைப் புளுகைப் பரிமேலழகர் கூறியிருப்பதையும், அஃதவ்வாறன்று எனப் பாவாணர் தம் மரபுரையில் மறுத்திருப்பதையும் மேன்மேலும் வலியுறுத்தவேயாம். எனவே திருக்குறள் தமிழ் மரபுரையைக் கற்க முற்படுபவர்கள் ஒரு முறை மனுநூலையும், அதன்பின் ஒருமுறை திருக்குறள் பரிமேலழகர் உரையையும், அதன்பின் அத்துடன் தமிழ் மரபுரையை ஒப்பவைத்தும் கற்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன். அவ்வாறு கல்லாதவர்கள் பரிமேலழகரைப் பாவாணர் வேண்டுமென்றே குறைகூறியிருப்பதாகவும், பரிமேலழகர் கூறியவற்றையே பேரளவில் பாவாணரும் பின்பற்றி

www.thamizham.net - Free E book No 7422

யிருப்பதாகவும் கருத இடமுண்டாகலாம். இவ்விடத்தில் இன்னொன்றையும் விளக்கிக்கூற வேண்டியுள்ளது.

ஒரு நூலுக்கு ஒருவர் எழுதிய வுரையையே பின்பற்றி இன்னொருவர் உரை எழுதினுர் என்று சொல்லப் பெறுவது, ஓரளவில் உண்மையாகுமே யாயினும் எல்லாரிடத்தும் அக்கூற்று பொருந்துவதாகாது. முன்னரெழுதிய உரைகாரரின் மதிநுட்பமும், அறிவுப்பரப்பும் பின்னரெழுதும் உரைகாரரினும் மிகுந்துள்ளனவா குறைந்துள்ளனவா என்பதைக் கருத்திற் கொண்டே இக்கருத்து தீர்மானிக்கப் பெறும். தொல்காப்பியத்தையே சொல்மாற்றி யெழுதி, அதற்கு 'நல்காப்பியம்' என்ற பெயரையும் சூட்டிக்கொண்டு, இதனை நானே எண்ணி யெழுதினேன் என்று வாயடித்துப் பேசுபவர்களும், கையடித்துச் சொல்பவர்களும் இக்காலத்து மிகுதி. இன்னோர் எக்காலத்தும் எந்நிலத்தும் உள்ளவரே. இன்னுரை நோக்கியே,

> கல்லாதான் ஒட்பம் கழியநன் ருயினும்
> கொள்ளார் அறிவுடையார்.
> கல்லா வொருவன் தகைமை தலைப்பெய்து
> சொல்லாடச் சோர்வு படும்.

—என்ற குறட்பாக்களும் எழுந்தன போலும்! 'போலித்துறவிப் பொன்னப்பர்களும்' 'கூலித்தமிழ்க் கொண்டான்மார்களும்' மிகுந்த இக்காலத்துப் பரிமேலழகரைப் பார்த்துப் பாவாணரும் வரைந்தார் என்றும் கூறலாம். அவர்கள் ஒன்றை மறந்துவிட வேண்டா. கதிரவன் என்பதற்குப் 'பரிதி' என்று ஒருவரும், 'சூரியன்' என்று ஒருவரும் 'எழிலி' என்று இன்னொருவரும் உரையெழுதலாம். ஆனுல் 'கடல்' என்று எவரும் எழுதமுடியாதே! இனி, ஒருவன் கதிரவன் என்பதற்குக் 'கடல்' என்று எழுதிவிட்டால் புத்துரை என்றும், 'பரிதி' என்றெழுதினுல் பழைய வுரையைத்தான் பார்த்து எழுதினுர் என்றும் சொல்ல முற்படுவதா? உரையென்பது சொற்பிரிப்பும், கருத்துப் பிரிப்பும், சொல்லுக்குப் பொருளும், பொருளுக்கு மரபும், மரபுக்குக் காட்டும், முன்னுரை மறுப்பும், தன்னுரைப் பொருத்தமும், பொருத்த வரலாறும் முதலிய பல உட்கூறுகளைக் கொண்டது. இவ்வுட்கூறுகளில் இருவேறு உரையாசிரியர்களின் ஓரிரு கூறுகள் ஒன்றவுஞ் செய்யலாம். அவ்வாறு ஒன்றும் இடங்களைக் கொண்டே முன்னவரைப் பார்த்துப் பின்னவர் பற்றினுர் என்றுரைப்பது பேதைமையாகும். பெரும்பாலும் எல்லார்க்கும் உறுப்புகள் ஒன்று

www.thamizham.net - Free E book No 7422

போலவே அமைந்திருப்பதால் எல்லாரும் ஒருவரே அல்லது எல்லார்க்கும் பெற்றோர் ஒருவரே என்றுரைப்பது அறிவுடைமை யாகுமா?

கடுகைத் துளைத்தேழ் கடலைப் புகட்டிக்
குறுகத் தறித்த குறள் —என்ற இடைக்

காடனார் பாட்டையே,

அணுவைத் துளைத்தேழ் கடலைப் புகட்டிக்
குறுகத் தறித்த குறள் —என்ற பாட்டாக

ஔவையார் மாற்றிப் பாடினார் என்றும், அதனால் ஔவையார் இக் காலத்துத் திரைப்பாட்டாசிரியர் ஒருவர்போல் பழம்பாட்டைப் படியெடுப்பவர் என்றும் கூறுவது அறிவைப் புறக்கணிப்பதாகும்.

இனி, பெரும்பாலான குறள்களின் உரைகள் எவர் உரைப்பினும் ஒன்றுபோலவே இருக்குமெனினும், பாவாணர் அவற்றிற்கு மாறுபடுவனவற்றிற்கு மட்டுமே உரையெழுதாது எற்றுக்கு நூல் முழுவதும் உரையெழுதவேண்டும் என்று நான் அண்மையில் நடந்த உலகத் தமிழ் மாநாட்டில் பாவேந்தர் சார்பில் கேட்ட கேள்வியையே சிலர் திருப்பிக்கேட்பதாகக் கேள்வியுறநேர்ந்தது. பாவேந்தர் எழுதிய உரை வேறு. பாவாணர் எழுதிய உரை வேறு. பாவேந்தர் தம் குயிலில் "வந்தவர் மொழியா செந்தமிழ்ச் செல்வமா" என்ற தலைப்பில் சொல்லாராய்ச்சிக் கட்டுரைத் தொடர் ஒன்றை எழுதிவந்தார். அத் தொடர் எவ்வகையானும் தமிழுக்குப் பெருமை தருவதாகாது என்று அன்று வருந்தியவர்களில் நானும் ஒருவன். இனி அவர் அத்தொடரில் தப்புந் தவறுமாக விளக்கிய சொற்களின் விளக்கங்களைத் தவிர எஞ்சியுள்ள சொற்களுக்கே பாவாணர் இனிமேல் சொல்லாராய்ச்சி செய்ய வேண்டும் என்று கூறுவது எத்துணை அறியாமையோ, அத் துணை அறியாமை வாய்ந்தது பரிமேலழகரொடு மாறுபடும் இடங்களுக்கு மட்டுமே பாவாணர் உரையெழுதி யிருக்கவேண்டும் என்பதும். இவ்வாறுரைப்பவர் பாவாணரின் அறிவாற்றலை நன்கு உணராதவரே என்று கூறி வருந்துவதைத் தவிர வேறு வழியில்லை. பாவாணரை நான் அளவிறந்து பாராட்டுவதாக ஒருசிலர் என்பால் உரைக்கக் கேட்டு நெஞ்சு புண்ணுற்றேன். அதைக் கேட்டபின்தான் ஆங்கிலத்தில் சொல்லப்பெறும் ஒரு பழமொழி முற்றிலும் உண்மை என்று எனக்குப் பட்டது. "ஓர் அறிஞன் ஆயிரம் ஆண்டுகளுக்கு ஒருமுறை பிறக்கின்றான். ஆனால் அவனை அறிஞன் என்று உணர்

www.thamizham.net - Free E book No 7422

பவன் பத்தாயிரம் ஆண்டுகளுக்கு ஒருமுறை பிறக்கின்றான்" என்பது அப்பழமொழி. மழுக்கத்தின் தன்மையைக் கண்டுபிடிப்பதைவிட, கூர்மையின் தன்மையைக் கண்டுபிடிப்பது மிக அரிது!

இனி, ஒருவர் நம்மவர் என்பதால் எவ்வளவு பாராட்டினாலும் பாராட்டலாம் என்பதும், ஆனால் ஓர் எள்ளளவும் தூற்றக்கூடாது என்பதும் இன வளர்ச்சிக்கு வேண்டுமானால் ஓரளவு பயன்படலாம். ஆனால் அறிவு வளர்ச்சிக்குத் துளியும் பயன்படாது. நான் இன வளர்ச்சியை விரும்புகின்றேன் என்பது இவ்வினம் தமிழினம் என்பதற்காகவோ, நான் பிறந்தஇனம் என்பதற்காகவோ அன்று. அறிவும் நாகரிகமும் பழைமையும் பெருமையும் வாய்ந்த ஓர் இனம் ஏமாற்றும், கரவும், பொய்யும் புரையும் மிக்க பிறிதோர் இனத்தால் வீழ்த்தப்பட்டும் தாழ்த்தப்பட்டும் கிடக்கின்றதே; அந்நிலை உலக மலர்ச்சிக்கே பொருந்தாததாய் இருக்கின்றதே அதனை ஓரளவு நம்மால் இயன்ற அளவு மாற்றப் பாடுபடவேண்டும் என்பதே என் குறிக்கோள். இக் குறிக்கோளை அடியொட்டியே நான் தமிழையும் பார்க்கின்றேன்; தமிழனையும் பார்க்கின்றேன். இதில் வாய்வாளாது பாராட்டவும் இடமில்லை; வாய் கூசாது தாழ்த்தவும் இடமில்லை. பொதுவாக நான் அறிவையே விரும்புபவன், அதையே தேடுபவன். அன்பு முதலிய பிற மெய்ந்நிலைகள் அறிவைக் கட்டுப்படுத்தக் கூடாதென்று கருதுபவன். பாவாணரின் அன்புக்கு நான் கட்டுப்படுவது வேறு; அவர் அறிவுக்கு நான் கட்டுப்படுவது வேறு. அன்பைப் பொறுத்த அளவில் பாவாணர்க்கு நான் நண்பன்; தோழன். அறிவைப் பொறுத்தவரை அவர் அறிவுக்கு நான் மாணவன்; அடிமை. இன்னுஞ் சொன்னால்,

யாதும் ஊரே யாவரும் கேளிர்
தீதும் நன்றும் பிறர்தர வாரா
நோதலும் தணிதலும் அவற்றோ ரன்ன
சாதலும் புதுவது அன்றே வாழ்தல்
இனிதுஎன மகிழ்ந்தன்றும் இலமே முனிவின்
இன்னா தென்றலும் இலமே மின்னொடு
வானம் தண்துளி தலைஇ ஆனாது
கல்பொருது இரங்கு மல்லல் பேர்யாற்று
நீர்வழிப் படூஉம் புணைபோல் ஆருயிர்

www.thamizham.net - Free E book No 7422

முறைவழிப் படூஉம் என்பது திறவோர்
காட்சியின் தெளிந்தனம் ஆகலின் மாட்சியிற்
பெரியோரை வியத்தலும் இலமே
சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே!

—என்னும் கணியன் பூங்குன்றனாரின் 192-ஆம் புறப்பாட்டை நான் நூற்றுக்கு நூறு பின்பற்றுபவன். அறிவைப் பாராட்டுவது வேறு; ஆளைப் பாராட்டுவது வேறு. சிறுமையை இகழ்வது வேறு; சிறியோரை இகழ்வது வேறு. தீமையைக் கண்டிப்பது வேறு; தீயோரைக் கண்டிப்பது வேறு. அறிவைப் பாராட்டுவதை ஆளைப் பாராட்டுவதாகவும், சிறுமையை இகழ்வதைச் சிறியோரை இகழ்வதாகவும் கருதுவார் இருக்கலாம். சிறுமை கண்டவிடத்து நான் கண்டித்ததைத் தம்மைப் பெரியோராகக் கருதியிருந்து என்னுடன் தொடக்கக் காலத்து ஒன்றியிருந்த சிலர், தம்மைச் சிறியோராகக் கருதியே நான் கண்டிப்பதாகக் கொண்டு பொறுது என்னினின்று நீங்கிய நிகழ்ச்சி எனக்கு அவ்வுண்மையை என்றும் உணர்த்திக்கொண்டுள்ளது.

இனி, பாவாணரும் தென்மொழியும் ஆரியப் பார்ப்பனரை அளவிறந்து கடிந்தெழுதுவதாகவும், பாவாணர் தம் தமிழ்மாபுரையில்கூட அவர்களை அறக்கடிந்திருப்பதாகவும் ஒரு சிலர் என்னிடம் நேரிலும் மடல்வழியாகவும் அடிக்கடி கூறி வந்துள்ளனர்; வருகின்றனர். அதைப்பற்றியும் சில விளக்கங்களைக் கூறி இக்கட்டுரையைத் தொடருவதே, நான் எழுதப்புகும் உரைநூற் சிறப்பு எத்துணை நடுநிலை வாய்ந்தது என்பதை அறிஞர் உணர வாய்ப்பளித்ததாகும் என்றும், பாவாணர்மேல் கொண்டுள்ள கசப்பை அகற்ற அதுவும் உதவும் என்றும் கருதுகின்றேன். அன்பர்கள் அதனையும் ஆழ்ந்து படிக்க வேண்டிக்கொள்கின்றேன். (தொடரும்)

---

**தனித்தமிழ்ச் செய்தித்தாள் திட்டத்தில்**

**நீங்கள் பங்காளர் ஆகிவிட்டீர்களா?**

**இல்லையெனில்**

**உடனே உங்கள் உறுதிமொழியை அனுப்புங்கள்.**

---

www.thamizham.net - Free E book No 7422

# தமிழன்பர் மாநாடும்
## மறைத்திரு மறைமலையடிகளும்

சென்னைப் பச்சையப்பன் கல்லூரி மண்டபத்திலே 1933 திசம்பர் 23, 24-ஆம் நாட்களில் தமிழ் அன்பர் மாநாடு சென்னை மாநிலக் கல்வி அமைச்சர் மாண்புமிகு 'திவான்பகதூர்' எசு. குமாரசாமி ரெட்டியார் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

'சென்னைப் புத்தகாலயப் பிரசார சங்கத்தார்' தமிழ் அன்பர் மாநாட்டை நடத்துவதற்குத் திட்டமிட்டுச் செயற்குழு ஒன்றை அமைத்தனர். அதன் தலைவர் திரு. கே. வி. கிருஷ்ணஸ்வாமி ஐயர் பெயரில் ஓர் அறிக்கை வெளியிடப்பெற்றது. அச் 'சங்கத்'தின் அமைப்பும் குறிப்பும் வருமாறு:

சென்னைப் புத்தகாலயப் பிரசார சங்கத்தின் நிர்வாக சபை

*தலைவர்; ஸ்ரீமான் கே. வி. கிருஷ்ணசாமி ஐயர்.*

துணைத்தலைவர்கள்:

*ஸ்ரீமான் எஸ். சத்தியமூர்த்தி*
*,, ஸௌகார் சி. அப்துல் ஹகீம் ஸாஹிப் பகதூர்.*
*,, டாக்டர் எப். எச். க்ரேவ்லி.*
*ஸ்ரீமான் திவான்பகதூர் ஏ. ராமஸ்வாமி முதலியார்.*
*,, சாமி வெங்கடாசலம் செட்டியார், எம். எல். ஸி.*

பொக்கிஷதார்

*ஸ்ரீமான் எஸ். ராமஸ்வாமி ஐயர்.*

காரியதரிசிகள்

*ஸ்ரீமான் கே. பாலசுப்ரமணிய ஐயர்*
*,, எஸ். ஆர். ரங்கநாதன்.*
*ஸ்ரீமான் எஸ். எம். பாஸில்.*

சங்கத்தின் பிற அங்கத்தினர்கள்

*ஸ்ரீமான் பி. என். அப்புஸ்வாமி.*
*,, கே. சந்திரசேகரன்.*
*,, ராவ்சாகிப் ஜி. கணபதி சாஸ்திரி.*
*,, ஸர் அல்லாடி கிருஷ்ண ஸ்வாமி ஐயர்.*
*,, மஹாமஹோபாத்தியாய எஸ். குப்புசாமி சாஸ்திரி.*
*,, கே. ஏ. நீலகண்டசாஸ்திரி.*
*ஸ்ரீமான் ராமராவ்.*
*,, ராவ்பகதூர் எம். ஆர். ராமஸ்வாமி சிவன்.*
*,, எம். எஸ். சபேச ஐயர்.*
*,, கே. வி. சேஷ ஐயங்கார்.*
*,, வத்திராயிருப்பு எஸ். சுப்பிரமணிய ஐயர்.*
*,, கே. ஸ்வாமிநாதன்.*
*,, டி. எஸ். வைத்தியநாத ஐயர்.*

www.thamizham.net - Free E book No 7422

ஸ்ரீமான் டி. ஆர். வெங்கடராம சாஸ்திரி.
,, எஸ். கே. யஜ்ஞநாராயண் ஐயர்.
மிஸஸ் ருக்குமணி லக்ஷ்மிபதி.
ஸ்ரீமான் பஷீர் அகமத் சையித் எம். எல். ஸி,
,, கே. சி. சாக்கோ,
,, ராவ்பகதூர் ஸி. கோபால மேனன்.
ஸ்ரீமான் ஏ. எ. ஹேல்ஸ்,
,, ராவ்சாகிப் எஸ். வி. கனக சபைப்பிள்ளை.
,, ராவ்பஹதூர் ஆர். கிருஷ்ண ராவ் பான்ஸ்லே.
,, ஏ. சிவராம மேனன்.
,, எஸ். வையாபுரிப்பிள்ளை.
,, ரைட் ரெவரண்ட் இ. எச். எம். வாலர்.
மிஸ் காரி கார்டன்.

அந்த அறிக்கையில் 'பொக்கிஷதார்,' 'காரியதரிசி', 'அங்கத்தினர்', 'மகாநாடு', 'தமிழ் அபிமானி', 'புத்தகாலயச் சங்கம்', 'பத்திரிகைகள்', 'விஷயங்கள்', 'அபிப்பிராயம்', 'சீக்கிரம்', 'நகல்' ஆகிய பிறசொற்கள் விரவியுள்ளன.

## மகாநாட்டுக் காரிய நிர்வாகசபை

22-10-1933இல் தமிழ் அன்பர் மகாநாடு காரிய நிர்வாகசபை (செயற்குழு)யின் அறிக்கை அதன் வரவேற்புச் 'சபைத்' தலைவர் டாக்டர் வே. சாமிநாதையர் அவர்கள் பெயரில் வெளிவந்துள்ளது. அதன் அமைப்பு வருமாறு:

### வரவேற்புச் சபைத் தலைவர்

மகாமகோபாத்யாய தாக்ஷிணாத்திய கலாநிதி
டாக்டர் வே. சாமிநாதையர்.

### வரவேற்புச் சபைத் துணைத்தலைவர்கள்

ஸ்ரீமான் கே. வி. கிருஷ்ணஸ்வாமி ஐயர்
,, எஸ். சத்தியமூர்த்திஐயர்
,, சி. ஆர். ஸ்ரீநிவாஸ ஐயங்கார்.
,, அ. ரங்கஸ்வாமி ஐயங்கார்.
,, திவான்பகதூர் சி. அருணாசல முதலியார்.
,, டி. கே. சிதம்பரநாத முதலியார்.
ஸ்ரீமதி எம். லக்ஷ்மி அம்மாள்
ஸ்ரீமான் சி. ஆர். நமச்சிவாய முதலியார்.
ஜனாப் ஜமால் மகம்மது சாகிப்,
குமாரராஜா எம். ஏ. முத்தையா செட்டியார்,
ஆனரபிள் பி. டி. ராஜன்.
டாக்டர் ஏ. லக்ஷ்மணஸ்வாமி முதலியார்,

### காரியதரிசியும் கஜான்ஜீயும்

ஸ்ரீமான் பெ. நா. அப்புஸ்வாமி,

### துணைக் காரியதரிசிகள்

ஸ்ரீமான் தி. கோ. ஆராவமுத ஐயங்கார்,
ஸ்ரீமான் ஆர். விசுவநாத ஐயர்
,, டி. எஸ். சொக்கலிங்கம்.

www.thamizham.net - Free E book No 7422

நிர்வாகச் சபைத்தலைவர்

*ஸ்ரீமான் கே. வி. கிருஷ்ணஸ்வாமி ஐயர்*

இதர அங்கத்தினர்கள்

*ஸ்ரீமான் ரா. கிருஷ்ணமூர்த்தி*
*,, கே. சந்திரசேகரன்*
*,, சங்கு சுப்பிரமணியன்.*
*,, கே. சுவாமிநாதன்.*
*,, ஜீ. கே. சேஷகிரி.*
*,, கே. பாலசுப்பிரமணிய ஐயர்.*
*,, எஸ். கே. யஜ்ஞநாராயண ஐயர்.*
*,, எஸ். ஆர். ரங்கநாதன்.*
*,, வ. ராமஸ்வாமி.*
*,, டி. எஸ். வைத்தியநாதன்.*
*ஸ்ரீமான் எம். எஸ். ஸபேசன்.*
*ஸ்ரீமதி. நல்லமுத்து ராமமூர்த்தி அம்மாள்*
*ஸ்ரீமான் எஸ். அனவரதவிநாயகம் பிள்ளை*
*,, எஸ். வையாபுரிப்பிள்ளை*
*,, வி. கலியாணசுந்தர முதலியார்.*
*,, எம். பக்தவத்ஸல முதலியார்.*
*ஜனாப் பஷிர் அகமத் சையித்.*
*ஜனாப் எஸ். எம். பாசில்.*

நிர்வாக சபை அறிக்கையிற் கண்ட பிற சொற்கள்*

வரவேற்புச்சபை, காரியதரிசியும் கஜான்ஜீயும்,† அங்கத்தினர்கள், தமிழ்ப்பாஷை, புராதனம், மேதாவிகள், ஜனங்கள், அபிப்பிராயங்கள், சக்தி, ஆலோசிப்பது, மகாநாடு, புஸ்தகாலயம், பிரசார சங்கம், வகிக்க, தமிழபிமானம், அனுபவம், விஜயம், காரியாலயம், ராஜதானி, சம்பந்தம்.

பல்லாவரம் மறைமலையடிகளாருக்கு அழைப்பு

தமிழன்பர் மகாநாட்டுக்கு வருகை தருமாறு பல்லாவரம் தனித்தமிழ்த் தந்தை மறைத்திரு மறைமலையடிகளுக்குத் திரு. கே. வி. கிருஷ்ணஸ்வாமி ஐயர் அவர்கள் 22-12-1933இல் அனுப்பிய அழைப்புத் தந்தியும் அதற்கு அடிகளார் அனுப்பிய மறுமொழிக் கடிதமும் அடியில் வருமாறு:

**Telegram Dt. 22-12-1933 from Krishnaswamy Iyer, Madras to Maraimalaiyadigal, Pallavaram.**

**"Please attend Tamilanbar Mahanadu-earnest request to you"**

"தமிழ் அன்பர் மகாநாட்டுக்கு வருகை தரும்படி உங்களை அன்போடு அழைக்கிறோம். கே. வி. கிருஷ்ணஸ்வாமி ஐயர்.

---

* சங்க இலக்கியங்களைப் பதித்த டாக்டர் வே. சாமிநாதய்யரவர்கள் கையெழுத்திட்ட அறிக்கையில் இத்தனைப் பிறமொழிச் சொற்கள் காணப்பெறுகின்றன என்பது வருந்துதற்குரியது.

† பொருளாளரைப் பொக்கிஷதார் என்றும் கஜான்ஜீ என்றும் குறிப்பிட்டிருப்பதும், தமிழறிஞர் பி. என். அப்புசாமிஐயர் கஜான்ஜீயாக இருப்பதும் வியப்பாகும்.

www.thamizham.net - Free E book No 7422

Reply Dt. 22-12-1933

"While thanking you and Dr. V. Saminatha Iyer for all the letters, invitations and Telegram, I very much regret to say that I am not inclined to attend any Tamil meeting which is not willing to maintain and advance pure Tamil. Of all the cultivated ancient languages, Tamil is the only one which is still living in all its pristine glory, I am strongly convinced that any mixture of foreign words in it, will tend to vitiate its healthy life and hamper its vigorous growth. Please, therefore, excuse me for not attending your conference which does not seem to meet my ideal."

–Maraimalaiyadigal.

அடிகளார் மறுமொழி

' கடிதங்கள், அழைப்புகள், தந்தி ஆகியவற்றிற்கெல்லாம் உங்களுக்கும், டாக்டர் வே. சாமிநாதய்யரவர்கட்கும் நன்றி தெரிவிப்பதோடு தூய தமிழை வளர்க்க விரும்பாத எந்தத் தமிழ்க் கூட்டத்திலும் கலந்து கொள்வதற்கு எமது மனம் இடந்தரவில்லை என்பதை மிகவும் வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கின்றேம். பண்பட்ட பழைய மொழிகளெல்லாவற்றிலும் தமிழ்மொழி ஒன்றுதான் இன்றும் தன் பண்டைநலஞ் சார்ந்த புகழோடு வாழ்கின்றது. பிறமொழிக் கலப்பு அதன் தூய தன்மையினைக் கெடுக்குமென்றும், அதன் வளர்ச்சியினைக் குன்றச்செய்யும் என்றும் யாம் உறுதியாக நம்புகின்றேம். ஆதலால் எமது தனித்தமிழ்க் கொள்கையினைக் கடைப்பிடிக்காத உங்களுடைய மாநாட்டிலே கலந்துகொள்ள முடியாமையினைப் பொறுத்துக் கொள்வீர்களாக"

–மறைமலையடிகள்.

தமிழன்பர் மாநாட்டினர் அறிக்கைகளிலும், அழைப்புக்களிலும் அடிகளார்தம் தனித்தமிழ்க் கொள்கைக்கு மாறான நோக்கங்களையும் பிறசொற் கலப்பினையுங் கண்ட மறைத்திரு மறைமலையடிகளார் மாநாட்டிலே கலந்துகொள்ளாமையோடு மறுத்தெழுதியது தமிழ் மக்கள் இன்றும் என்றும் விழிப்புணர்ச்சியோடு கடைப்பிடிக்கவேண்டிய சிறந்த கொள்கையாகும்.

தமிழன்பர் மாநாடு ஒரு சாரரின் சூழ்ச்சியோடு நடைபெறுவதறிந்து தமிழுணர்ச்சி மிக்க சிலர் மாநாட்டிலே புகுந்து மாநாட்டினர் கொண்ட நோக்கம் நிறைவேறாது செய்துவிட்டனர்.

இந்த மாநாட்டினால் மறைத்திரு மறைமலையடிகள் தனித் தமிழ்க் கொள்கை நன்கு வேரூன்றலாயிற்று.

இம் மாநாட்டிற்குப் பின்னரே கலைச்சொல்லாக்க இயக்கமும், இந்தி எதிர்ப்பு இயக்கமும், தமிழிசை இயக்கமும் தோன்றி எத்தனையோ எதிர்ப்புகளுக்கிடையே வளர்ச்சி பெறலாயின'

(நன்றி: 'செந்தமிழ்ச்செல்வி' யிலிருந்து எடுக்கப்பட்டது )

www.thamizham.net - Free E book No 7422

# கதவுக்குக் கதவு

பாவை-நடவரசன்.

உள்ளங்கள் ஒன்றுபட்ட பின்னர், பிரிந்து வாழ்வதில்லை; வாழவும் அவற்றால் முடிவதில்லை. பனிமலையே எதிர்வந்து நின்ற போதும், பல கடலும் அதன்பின்னே ஆர்த்தெழுந்து அணிவகுத்து நின்றபோதும் அந்த உள்ளங்களைத் தடுக்க முடியாது; அவற்றின் ஒற்றுமையைப் பிரிக்க முடியாது.

ஆங்கில நாட்டு ஆளும் சார்ச்சுக்கு அரசைத் துறப்பதா? காதலைத் துறப்பதா? என்ற நிலை ஏற்பட்டது. அப்பொழுது, அவர் காதலுக்காக அரசையே துறந்தார். அப்படி அவரைக் காதல் பிடர்பிடித்துத் தள்ளியிருக்கிறது. அரசப் பேற்றிலிருந்து விட்டு விலகிவர உள்ளத்தைக் கவ்வி இழுத்திருக்கிறது.

காதலுக்கு இருக்கின்ற இத்தகைய ஆற்றலினை நம் கழக இலக்கியங்களில் காணலாம்; கலித்தொகையில் நாடகமாகப் பார்க்கலாம்; குறுந்தொகையில் சிறுகதையாகப் படிக்கலாம்; அகநானூற்றில் ஓவியமாகக் காணலாம்; இந்த இருபதாம் நூற்றாண்டில், பாவேந்தர் பாடல்களில், வடித்த வண்ணப் படிவமாக (சிலையாக)ப் பார்த்து மகிழலாம். சான்றுக்கு ஒன்று காண்போம்.

பாவேந்தர் படைத்த தலைவனின் பெயர் வேல்முருகன். வள்ளியைத் தேடிக்கொண்டு சென்றானே தெய்வமுருகன்—அவனைப் போல் இந்த வேல்முருகனும் கண்மயக்கும் காரிருட்டில் காதலியைத் தேடிக்கொண்டு சென்றான். காதல் உள்ளம் பிடர்பிடித்துத் தள்ள அவன் கால்கள் விரைந்து செல்ல, அவனோ வழியைக் கடந்துகொண்டிருந்தான். போருக்குப் போகும் பெருமறவன் போல் பீடுநடை போட்டுக்கொண்டு, உள்ளத்தில் தன் காதலியைப் பற்றி ஓராயிர எண்ணங்களை எண்ணி எண்ணி மகிழ்ந்துகொண்டு சென்றான். அப்படிச் செல்லும்பொழுது, 'எந்த இடத்தில் போகின்றோம். எந்த வழியாகப் போகின்றோம்; யார், யார் முன்னால் வருகிறார்கள்' என்பதை அறியாமல், அந்த ஒரே நினைப்போடு சென்றுகொண்டிருந்தான், வீட்டின் கதவுக்கு முன்பு வந்து—தன்னையே மறந்து வந்தானோ என்னவோ, அப்படியே நின்றான்.

நின்றவுடனே ஒருவரை ஒருவர் பார்த்து அடையாளம் கண்டு கொள்ள முடியாத அந்தக் கண்மயக்கும் பேரிருட்டில்—காதலியைப்

www.thamizham.net - Free E book No 7422

பெயர் சொல்லிக் கூப்பிடவில்லை. கதவினைக்கூடத் தட்டவில்லை. பின் என்ன செய்தான் தெரியுமா?

ஏதும் பேசாமல் எவ்வகையான ஓசையும் செய்யாமல் இருவிரலை மட்டும் (கட்டை விரலால் நெளி விரலையும் சுண்டு விரலையும் மடக்கிக் கொண்டு, சுட்டுவிரலாலும் பாம்பு விரலாகிய நடுவிரலாலும்) கதவின் மேல் ஊன்றினான். இருட்டு வேளையில் இருவிரலை மட்டும் ஓசையின்றி ஊன்றினால் கதவு திறக்குமா?

'தட்டுங்கள் திறக்கப்படும்' என்றார் இயேசுபெருமான். ஆனால், இந்த வேல்முருகன் தட்டவில்லையே; இருவிரலால் மட்டும் ஊன்றினான். ஆனாலும் இங்கே ஒரு வியப்பான நிகழ்ச்சி-இதுவரை அகத் துறைப் பாடல்களில் வராத நிகழ்ச்சி வருகிறது.

அவன் கதவின்மேல் இருவிரலை ஊன்றினான் இல்லையா, அப்படி அவன் ஊன்றிய உடனே, "திறந்தேன்" என ஒரு குரல் சொல்லக் கேட்டான். என்ன வியப்பு! அழைப்புமணி (Calling Bell) பொத்தா னின் மேல் கைபட்டவுடனே அது 'கிணிகிணி' என ஒலிப்பதுபோல், கதவின்மேல் விரல் ஊன்றியவுடனே, 'திறந்தேன்' என்னுஞ்சொல் கேட்கிறதே! இது வியப்பாக இல்லை!

வேல்முருகனுக்கும் இந்த வியப்பு ஏற்படுகிறது. விரல் ஊன்றிய அந்தக் கதவுகூட புறக்கடையில் இருக்கும் கதவா? அன்று, அன்று! தெருப்பக்கம் அமைந்திருக்கும் திருக்கதவு! "வழக்கமாகக் கேட்காத சொல், இன்று கேட்கிறதே" என வியக்கின்றான். வியந்து, 'ஆ ஆ! மரக்கதவும் பேசுமா?" என நினைக்கின்றான்.

*காதல் துரத்தக் கடிதுவந்த வேல்முருகன்*
*ஏதும் உரையாமல் இருவிரலை வீட்டுத்*
*தெருக்கதவில் ஊன்றினான் திறந்தேன்என் றோர்சொல்*
*வரக்கேட்டான், "ஆ ஆ மரக்கதவும் பேசுமோ?"*

இப்படி அவன் வியந்து நினைத்த அடுத்த நொடியில் கதவு திறக்கும் ஒலி கேட்டான்; கையொன்று வந்து, தாவித் தன்னைப் பிடிப்பதையும் உணர்ந்தான்...... ஓ ஓ! இது காதலியின் கையெனத் தெரிந்தான்; மலரினை நுகர்தல் போன்று அம்மலர்க்கையினையும் பிடித்து நுகர்ந்து, மகிழ்ந்தான்.

*"சின்ன கதவு திறந்த ஒலியோடு*
*தன்னருமைக் காதலியின் தாவுமலர்க் கைநுகர்ந்தான்"*

www.thamizham.net - Free E book No 7422

இங்கே 'ஓடு' என்னும் மூன்றும் வேற்றுமை உருபினை வைத்து உடனிகழ்ச்சியை-காதலியின் உணர்ச்சியை, இலக்கண வாயிலாக அறிந்துகொள்ளவிட்டுவிட்டார், பாவேந்தர்.

காற்றோடு மழை வந்தது-இந்தச்சொற்றொடரில், காற்று அடித்து நின்றபின்னர், மழை வந்தது என்று பொருள்? இல்லை. காற்று வந்தது. மழையும் வந்தது. இரண்டும் ஒரே நேரத்தில் வந்தன. அதேபோன்றுதான் கதவு திறந்த ஒலி கேட்டதும், காதலனை நோக்கித் தாவிய கை அவனைப் பிடித்ததும் ஒரே நேரத்தில் நடந்திருக்கின்றன. இன்னும் விளக்கமாகச் சொல்லப்போனால், காதலி ஒரு கையால் கதவினைத் திறந்துகொண்டு மற்றொரு கையால், காதலனைப் பிடித்து உள்ளே அழைத்திருக்கிறாள். அவளின் அகத்துணர்வினை-அந்த வுணர்வால் அவள் செய்த செயலினைத் தெளிவாக நமக்குத் தெரிவிப்பது 'ஓடு' எனும் வேற்றுமை உருபாகும்.

படம் பிடித்துக் காட்டுவதுபோல் 'ஓடு' எனும் வேற்றுமை உருபு, அவளின் அழகிய செயலினை நமக்கு எடுத்துக் காட்டுகிறது. இலக்கணத்துள் இலக்கியத்தை அடக்கி, இப்படி இலக்கணத்தாலே பொருள் புரிந்துகொள்ள விடும்பொழுது, அந்த இலக்கியத்தின் சுவை உயர்ந்தநிலை அடைகிறது; இலக்கணத்தின் பெருமையும் உயிர்நிலை அடைகிறது.

கைப்பிடித்து உள்ளழைத்த காதலியோடு சென்ற வேல்முருகன், உள்ளெரிந்த விளக்கொளியில், அவள் முகத்தைக் கண்டான்; புன்முறுவல் பூக்கப் பூவையவள் நின்றிருக்கக் கண்டான்; கண்டு, தானும் உள்ளம் பூரித்துப்போனான். இருந்தாலும் அவன் உள்ளத்தில் ஓர் ஐயம் இருந்தது. எப்படி இவளுக்கு நான் வந்தது தெரியும்? கதவின்மேல் விரலை ஊன்றியதை எப்படி இவள் உணர்ந்தாள்? இந்த ஐயம் அவன் உள்ளத்தைக் குத்திக் கிளறிக்கொண்டிருந்தது.

'அலிபாபா நாற்பது திருடர்கள்' என்னும் கதையில்கூட, அக்கூட்டத்தலைவன் குகையின்முன்பு நின்றுகொண்டு ஏதோ ஒருவகைக் கமுக்கமான மந்திரச்சொற்றொடரைச் சொல்கின்றான். அப்படி அவன் சொன்ன பின்னர்தான், அந்தக் குகை மூடவோ, திறக்கவோ செய்கிறது. அப்படி இருக்க, வேல்முருகன் விரலை ஊன்றிய உடனே கதவு திறக்கிறதே! இதுவரை நடக்காத நிகழ்ச்சியன்றோ இது! ஒருவேளை அவன் முன்னமே சொல்லி வைத்திருப்பானோ? இருக்காது. அப்படி

www.thamizham.net - Free E book No 7422

அவன் சொல்லி வைத்திருப்பானேயானால், அவன் ஏன், 'மாக்கதவும் பேசுமோ?'' என வியந்து நினைக்கின்றான். அந்த ஐயத்தை அவனே அவளிடத்திலே, "என்னேடி தட்டுமுன்பு தாழ்திறந்து விட்டாயே" எனக் கேட்கின்றான். அதற்கு அவள் தருகின்ற விடை, கேட்க வியப்பாக இருக்கிறது.

"விட்டுப் பிரியாதார் மேவுமொரு பெண்நான்.
பிரிந்தார் வரும்வரைக்கும் பேதை தெருவில்
கருமரத்தாற் செய்த கதவு"

"விட்டுப் பிரிய மனமில்லாதார் விரும்புகின்ற பெண்நான். அவரைவிட்டுப்பிரிந்திருக்க நேர்ந்துவிட்டால், அவர் வரும்வரைக்கும் வெளியில் கருமரத்தால் செய்துவைத்த கதவுபோல், அவர் வரவினை எதிர்நோக்கி நின்றிருக்கும் பேதை நான்."

அன்பு நிறைந்த உள்ளத்தின் அழகு நிறைந்த கருத்து இது; செயல் இது. பிரிவாற்றுமையைத் தாங்கமுடியாத இத்தலைவி வெளியே வந்து கதவுக்கு ஒரு கதவாக நின்றிருக்கின்றாளே! அதை நினைக்கின்ற பொழுது எந்தத் தலைவியும் இப்படிச்செய்யவில்லை என்றுதான் சொல்லவேண்டியிருக்கிறது.

கண்மயக்கும் காரிருட்டில், கருமரத்தால் செய்த கதவுபோல் கதவுக்கு முன்னால் ஒரு கதவாக நின்றிருகின்ற தலைவியையும், கதவின்மேல் இரு விரலைமட்டும் ஊன்றி நிற்கின்ற தலைவனையும் மறக்க முடியாத வகையில் பாவண்ண ஓவியமாகப் பாவேந்தர் வரைந்துள்ளார். O


## தென்மொழி-கடலூர்-I.

[உலகத் தமிழ்க் கழகச் செய்திகள் முழுமையாகத் தொடர்ந்து வரும் ஒரே இதழ்]

தனித்தமிழில் வெளிவரும் உயர்ந்த இலக்கிய இதழ்.

ஒவ்வொரு தமிழ்த்திங்களும் முதல் நாளன்று வெளிவரும்.

| | உள்நாடு | கொழும்பு | வெளிநாடு |
|---|---|---|---|
| ஆண்டுக் கட்டணம்: | 9 உருபா. | 10-50 உருபா. | 13 உருபா |
| தனி இதழ்: | 75 காசு. | 90 காசு. | 1 உருபா |


www.thamizham.net - Free E book No 7422

# அணுவின் அமைப்பும் ஆற்றலும்!

-தமிழ்நம்பி.

முன்னுரை:

இப்பெரும் புடவியினுள்ளடங்கிய நிலம், நீர், நிலைத்திணை, மாந்தர்கள், விலங்குகள், ஏனை உயிரினங்கள், மாழைகள், காற்று, இன்னும் பிறவுமாகிய அனைத்தும் அணுக்களால் ஆனவையே. அணுக்களால் ஆகிய திட, நீர்ம, வளி உருவிலுள்ள தனிமங்கள், தனியாகவும் ஒன்றோடொன்று சேர்ந்தும், பல்வேறு பொருள்களாகி யிருக்கின்றன. இன்றும் இனிவருங் காலத்திலும் உலகின் ஆக்கமும் அழிவும் அணுவாற்றலையே பொறுத்துள்ளதாகையால் அவ்வணுவின் அமைப்பையும் ஆற்றலையும் சற்றுக் காண்போம்.

அணுவும் தனிமமும்:

தனிமத்தைச் (Element) சிறிது சிறிதாகப் பிரித்துக் கொண்டே போனால், அதற்குமேல் இனி எந்த முறையினாலும் பிரிக்க முடியாத, தனியாக நிலைத்து நிற்கக் கூடிய மிகச் சிறிய துணுக்கே அணு (Atom) ஆகும். ஒரு குறிப்பிட்ட பொருளைத்தவிர வேறு எந்தப் பொருளும் கலந்திராத பொருளே தனிமம் அல்லது தனிப்பொருள் ஆகும்.

அணுவின் அமைப்பு:

(க) அணுவில் சிறியதொரு கதிரவன் மண்டலமே காணப்படுகின்றது. கதிரவனைக் கோள்கள் சுற்றி வருவதைப்போல அணுவின் உட்கரு (Nucleus)வை மின்னணுக்கள் (Electrons) சுற்றி வருகின்றன. பல மின்னணுக்கள் ஒன்று சேர்ந்துகொண்டு, தனித்தனி அடுக்காக (Layer) அமைந்து, அவ்வடுக்கில் ஒவ்வொரு மின்னணுவும் ஒவ்வொரு சுற்றுப்பாதையில் சிறிதும் பிறழாது சுற்றி வருகின்றன.

(உ) அணுவின் உட்கருவில் உள்ள ஏறத்தாழ இருபது வகைத் துகள்களுள் நேர்மின்னி (Proton), மின்நடுவி (Neutron) இரண்டும் சிறப்பானவை. ஒரு தனிமத்தின் அணுவில் உள்ள நேர்மின்னி (Proton)களின் எண்ணிக்கை அப் பொருளின் 'அணுஎண் (Atomic Number) எனப்படுகின்றது.'

www.thamizham.net - Free E book No 7422

அணுவின் உட்கருவிலுள்ள நேர்மின்னிகளின் எண்ணிக்கையை யும் மின் நடுமங்களின் (Neutrons) எண்ணிக்கையையும் கூட்டி ஞல் பெறும் தொகையே அணு எடை (Atomic Weight) ஆகின்றது.

(௩) வெவ்வேறு தனிமங்களின் அணுக்களில் மின்னணுக் களின் (Electrons) எண்ணிக்கை வெவ்வேருக உள்ளது. ஆனல் ஒரு தனிமத்தில் உள்ள எல்லா அணுக்களிலும் சம எண்ணிக்கை யுள்ள மின்னணுக்களே உள்ளன. மேலும், ஒரே தனிமத்தின் அணுக் களனைத்தும் வேறுபாடே இன்றி ஒன்றுபோன்றே இருக்கின்றன.

ஒவ்வோர் அணுவிலும் உட்கருவிலுள்ள நேர்மின்னிகளும் (Protons), அவ்வுட்கருவைச் சுற்றிவரும் மின்னணுக்களும் சம எண்ணிக்கையில் உள்ளன.

(௪) ஒவ்வோர் அணுவிலும் கடைசி அடுக்கில் சுற்றிவரும் மின்னணுக்கள் ஈற்றடுக்க மின்னணுக்கள் (Valency Electrons) எனப்படுகின்றன. ஈற்றடுக்க மின்னணுக்கள் 8 ஆக உள்ள பொருள் கள் "நிறைந்த அடுக்கு" (Completed layer) உடைய பொருள்கள் என்றும், 8-க்குக் குறைவாக உள்ள பொருள்கள் "நிறையா அடுக்கு" (Incomplete layer) உடைய பொருள்கள் என்றும் கூறப்பெறு கின்றன. நிறையா அடுக்குகள், 8 ஈற்றடுக்க மின்னணுக்கள் கொண்ட நிறைந்த அடுக்குகள் ஆக முயலும்.

மின்னணுக்கள் 1, 2, 3 போன்று குறைந்த எண்ணிக்கையில் உள்ள பொருள்களில் அவற்றை அவ்வணுக்களிலுள்ள நேர்மின்னி கள் மிகுந்த அழுத்தத்துடன் ஈர்த்துப் பிடித்திரா. இந்த மின்னணுக் களை ஓர் ஆற்றல் கொடுத்துத் தள்ளினுல் அவை அந்த அணுவை விட்டு அடுத்துள்ள அணுவினுள் போய்ச்சேரும். உடனே அங்குள்ள ஈற்றடுக்க மின்னணுக்கள் தள்ளப்பட்டு அடுத்திருக்கும் அணுவிற் குத் தாவிச்செல்லும். இவ்வாறு அணுவிற்கு அணு தாவிச்செல்லும் மின்னணுக்களின் ஆற்றலேயே மின்சாரம் என்கிறேம். மேலும், மின் அணுக்கள் 1, 2, 3 என்ற எண்ணிக்கையில் கொண்ட அணுக்களை உடைய பொருள்களை "எளிதிற் கடத்திகள்" (Good Conductors) என்றும், 5, 6, 7 போன்ற எண்ணிக்கையில் உள்ள அணுக்களைக் கொண்ட பொருள்களை "அரிதிற் கடத்திகள்" (Insulators) என் றும் கூறுகின்றேம்.

www.thamizham.net - Free E book No 7422

(ஒ) அணுவில் உள்ள மின்னணுக்கள் (Electrons) எதிர் மின்னேற்றம் உடையனவு(Negatively Charged)யாயும் நேர்மின்னிகள் (Protons) நேர் மின்னேற்றம் உடையவை (Positively Charged)யாயும் உள்ளன. மின் நடுமங்கள் (Neutrons) நேர்மின்னேற்றமோ எதிர் மின்னேற்றமோ பெற்றிராது மின்னியற் பொதுநிலை உடையனவாய் உள்ளன. நீரிய (Hydrogen) அணுவைத்தவிர பிற வனைத்திலும் மின் நடுமங்கள் உள்ளன.

(க) இப்பெரும் புடவியிலுள்ள எல்லா நேர்மின்னிகளும் சமமாக, ஒன்றைப் போலவே உள்ளன. அவ்வாறே எல்லா மின்னணுக்களும், எல்லா மின் நடுமங்களும் சமமாகவும் ஒன்றுபோன்றேயும் உள்ளன.

(எ) சூரியனிடமுள்ள ஈர்ப்பாற்றலினாலேயே கோள்கள் சூரிய மண்டலத்தைவிட்டு விலகாது சுற்றி வருகின்றன. ஆனால் மின்னணுக்களையும் உட்கருவையும் இழுத்துப் பிடித்துள்ள ஆற்றல் நேர் மின்னேற்றங்களும் எதிர் மின்னேற்றங்களும் ஒன்றின் மீது ஒன்று செலுத்தும் கவர்ச்சியாகும்.

(அ) ஒரு தனிமத்தின் அணுக்களிலுள்ள உட்கருக்களில் அடங்கிய நேர்மின்னிகளின் எண்ணிக்கை சமமாக இருந்து மின்னடுமங்களின் எண்ணிக்கையில் வேறுபாடு இருந்தால், அப்படிப்பட்ட அணுக்களுக்கு ஓரிடத்தான்கள் (Isotopes) என்று பெயர்.

**அணுவாற்றல்:**

அணுவின் உட்கரு உறுதியாகக் கட்டப்பெற்ற ஒரு பொட்டணத்தைப் போன்று உள்ளது. சிலவகை அணுக்களின் உட்கருக்களைப் பிளக்க முடியும். இன்னும் சிலவகை உட்கருக்கள் தாமே பிளந்து விடுகின்றன. இவ்வகை அணுக்கள் கதிர்வீசற் கிளர்ச்சியுள்ள (Radioactive) அணுக்கள் எனப்படும். இயல்பாகவே கதிர்வீசற் கிளர்ச்சியுள்ள அணுக்கள் பிளவுபடும் பொழுதும், மாந்தன் செயற்கை முறையில் அணுக்களைப் பிளக்கும் பொழுதும் அணுக்களின் உட்கருக்களில் உள்ள ஆற்றலில் ஒரு பகுதி வெப்பமாகவும் கதிராகவும் விடுவிக்கப்படுகின்றது. இவ்வாற்றலே அணுவாற்றலாகும்.

இயல்பாக அணுக்களைப் பிளக்கும் பொழுது அணுப்பகுதிகளைப் பிரிக்கும் பொழுது—அணுவாற்றல் பெறப்படுகின்றது. எனினும் அணுப்பகுதிகளைச் சேர்க்கும் பொழுதும் அணுவாற்றலை உண்டாக்க

www.thamizham.net - Free E book No 7422

லாம். ஓர் அணுவின் உட்கரு சில துகள்களை உள்ளே ஏற்றுக்கொண்டாலும் அல்லது அவ்வுட்கருவிலிருந்து சில துகள்கள் வெளியேறினாலும் அந்த அணு பிளக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்பெறும். அணுத் துகள்கள் ஆற்றலை வெளிப்படுத்த உட்கருக்களில் சேர்கின்ற நிகழ்ச்சி இணைதல் (Fusion) என்றும், பிரிகின்ற நிகழ்ச்சி சிதைவு (Fission) என்றும் கூறப்படுகின்றன. மாந்தன் பலகோடி அணுக்களின் உட்கருக்களைப் பிளந்து—துகள்களைப் பிரித்து—சிதைவு முறையில் பேரளவு அணுவாற்றலை அணுக்குண்டுகளின் (Atom Bombs) மூலம் வெளிப்படுத்த அறிந்து கொண்டுள்ளான். மேலும், அணுப் பகுதிகள் சேர்வதனால்—இணைதல் முறையில் அணுவாற்றலை நீரியக் குண்டுகளின் (Hydrogen Bombs) மூலம் வெளிப்படுத்தவும் அறிந்துள்ளான். ஞாயிற்றில் அணுப்பகுதிகள் சேர்வதினாலேயே ஆற்றல் வெளிப்படுகின்றது.

சிறிய அளவில் அணுக்களில் இணைதலையும் சிதைவையும் செய்யும் பெரிய பொறிகளுக்கு அணுச்சிதைப்பான்கள் (Atom Smashers) என்று பெயர். இக்கருவிகளில் அணுப்பகுதிகளான நேர்மின்னி அல்லது மின்நடுவி அல்லது மின்னணுவைப் பயன்படுத்தி உட்கருக்கள் பிளக்கப்படுகின்றன. இந்நுண்மையான துகள்கள் அளவற்ற விரைவுடன் இலக்குகளை நோக்கி எறியப்படும்பொழுது அணுக்களின் உட்கருக்கள் பிளக்கப்படுகின்றன.

ஏதேனும் ஓர் அளவு * விண்ணிய (Uranium) த்தில் சில அணுக்கள் எப்போதும் பிளந்து கொண்டே இருக்கின்றன. ஆகவே எப்போதும் சில விடுதலையான மின்னடுவிகள் இருக்கின்றன. தேவையான அளவு விண்ணியத்தை ஓரிடத்தில் திரட்டிக் குவித்தால் இந்த விடுதலையான மின்னடுவிகள் வேறு விண்ணிய அணுக்களின் உட்கருக்களையும் இன்னும் பல அணுக்களின் உட்கருக்களையும் பிளக்கும். இவ்வாறு அணுவைப் பிளக்கும் சங்கிலித் தொடர் (Chain reaction) அமைத்து அளவற்ற ஆற்றல் வெளிப்படுத்தப் படுகின்றது.

ஓரிடத்தில் பல எலிப்பொறிகளை வைத்து, முதலில் உள்ள பொறியின் வில்லை ஒரு கோலிக்குண்டால் தட்டிவிட்டால் அப்பொறி

---

* Uranium என்ற ஆங்கிலச்சொல் இலத்தீனிலும் கிரேக்கிலுமுள்ள விண்ணுலகம் (Heaven) என்ற பொருளுடைய (Ouranos) என்ற சொல்லினின்றும் பிறந்ததாகும். எனவே Uranium விண்ணியம் என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

www.thamizham.net - Free E book No 7422

இயங்குவதால் ஏற்படும் இழுப்பால் அடுத்துள்ள சில பொறிகளும் இயங்கும்படியும், பின்னர் அப்பொறிகளின் இயக்கத்தால் ஏற்படும் இழுப்பால் அவற்றை அடுத்துள்ள சில பொறிகள் இயங்கும்படியாகவும்—இவ்வாறு பல பொறிகள் இயங்கும்படி உள்ள அமைப்பே சங்கிலித்தொடர் அமைப்பாகும். அணுப்பிளவில் சங்கிலித்தொடர் அமைப்பு, அணு என்ற எலிப்பொறியை மின்னணுவி என்ற கோலிக் குண்டு இயக்க, தொடர்ச்சியாக நடைபெறுகின்றது.

**அணுவாற்றலின் பயன்கள்:**

அணுவாற்றல் வெடிகுண்டுகளின் மூலமாக அழிவுக்குப் பயன்பட்டதை, சென்ற உலகப்போரில் சப்பானில் நாகசாக்கி, இரோசிமா ஆகிய இடங்களில் அமெரிக்கா அணுக்குண்டுகளைப் பயன்படுத்திய போது அறிந்தோம். 1945-ஆம் ஆண்டு ஆகஃச்டு மாதம் 6-ஆம் பக்கல் சப்பானில் அமெரிக்கா அணுக்குண்டுகளைப் பயன்படுத்தியதில் ஒரே நாளில் 80,000 பேர் உயிரிழந்தனர். அத்துடன் அழிவு நின்றுவிடவில்லை. அணுக்குண்டு வெடித்தபோது ஏற்பட்ட வெப்பத்தாலும் கதிர்வீச்சாலும் (Radiation) பின்னரும் கதிர் இயக்கத்தாலும் (Radio-activity) உயிரிழந்தவர் போக, நோயுற்றவரும், உறுப்பிழந்தவரும் எண்ணற்றோர்! அம்மட்டோ! அக்கதிரியக்கம் பலநாட்கள் கழித்தும் அம்மக்களுக்குப் பல நோய்களை உண்டாக்கியது. மேலும், அம்மக்களின் பிறங்கடையினர் உடல்நலத்திற்கும் கேடுசெய்வதாக அவ்வாற்றல் அமைந்துள்ளதென அறிஞர்கள் கூறுகின்றனர். இற்றைக்கோ இன்னும் கொடுமையான விளைவுகளை ஏற்படுத்தும் நச்சுக் குச்சில்களைப் (Poisonous Bacterias) பரப்பிவிடுவன போன்ற குண்டுகளை மாந்தன் செய்து வைத்துக் கொண்டிருக்கின்றான்.

இவ்வாறு அழிவுத்துறைக்குப் பயன்பட்ட கொடிய, வலிவு சான்ற அணுவாற்றலில் உள்ள வெப்ப ஆற்றலைப் பயன்படுத்திச் சூழ்ச்சியங்களையும் (Engines) மின்னாக்கிகளையும் (Dynamos) இயக்கும் திறமையையும் மாந்தன் பெற்றுள்ளான். இதனால் இயங்கிகளிலும், தொழிற்சாலைகளிலும் அணுவாற்றல் பெரிதும் பயன்படுகின்றது. இவ்வாறு பயன்படுத்தும்போது கதிரியக்கத்தினின்றும் தன்னைக் காத்துக்கொள்ளவே மாந்தன் பெருமுயற்சி செய்யவேண்டியதாயிருந்தது; இருக்கின்றது.

அணுப்பிளவினால் ஏற்படும் கதிரியக்கம் மருத்துவத்துறையில் புற்று, வலிப்பு, சோகை முதலிய பல நோய்கள் தீரப் பயன்படுத்தப்

www.thamizham.net - Free E book No 7422

படுகின்றது. வேளாண்மைத் துறையில் உரத்திற்கும் பயிருக்குக் கேடு செய்யும் பூச்சிகளைக் கொல்லவும், காய்கறிகளை நெடுநாட்களுக்குக் கெடாமல் சேமித்து வைக்கவும், காய்கறிகளின் உருவத்திலும் சுவையிலும் நிறத்திலும் தேவையான மாற்றங்களைச் செய்துகொள்ளவும் கதிரியக்கம் பயன்படுகின்றது. மொத்தத்தில், எதிர்காலத்தில் அடுப்பெரித்தல் முதல் விண்வெளிச்செலவு போன்ற எல்லாவற்றிற்கும் அணுவாற்றலே பயன்படுத்தப்பெறும் என்று அறிவியலறிஞர்கள் கூறுகின்றனர். எல்லாத் துறைகளிலும் எல்லா இயக்கங்களுக்கும் அணுவாற்றல் பயன்படுமென்று மொழிகின்றனர்.

இந்தியாவில், வடநாட்டில், பம்பாய்க்கு வடக்கே 85 கல் தொலைவில் தாராப்பூரில் 6500 பேர் பணிபுரியும் (4 இலக்கம் K.W) மின்னம் உண்டாக்கும் அணுமின் நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. இஃது இந்தியாவின் முதல் அணுமின் நிலையமும் ஆசியாவிலேயே மிகப் பெரியதும் ஆகும்.

அணு ஆய்ந்த அறிஞர்:

செருமெனியில் ஆன் (Hahn), இசுடிராசுமன் (Strassman) ஆகியோரும், கோப்பன் ஏகனில் இலைசுமெயிட்னர் (Lise Meitner) என்பவரும் ஐரோப்பாவிற் பிறந்து செருமானிய இத்தாலிய வல்லாட்சிக் கொடுமையினின்றும் தப்ப அமெரிக்கா சென்று வாழ்ந்தவர்களான பெர்மி (Fermi) ஐன்சுடீன் (Einstein) ஆகிய அறியவியலறிஞர்களும் தலையாய அணு ஆய்வுகளைச் செய்துள்ளனர்.

முடிவுரை:

அறிவியல் துறையில் மேனாட்டினர் நம்மினும் நூறாண்டுக் காலம் முன் சென்றுள்ளனர் என்றும், இன்னும் நூறாண்டு கழித்து நாம் அவர்களின் இன்றைய நிலையை அடையுங்கால் அவர்கள் மேலும் நூறாண்டுக்கால முன்னேற்ற நிலையில் இருப்பர் என்றும் பொதுவாகச் செய்திகள் கூறுகின்றன. இந்நிலையில், தன்னையே உணராத தமிழன் மேனாட்டினரோடு அறிவியற்றுறையில் போட்டியிடும் காலமும் உண்டோவென ஏங்கும் நெஞ்சம் தன்னை உணர்ந்து தன் நிலை மீட்பானுயின் அற்றைக்கே அணுவை அறிந்ததாக இலக்கியங்கூறும் தமிழனின் பிறங்கடை, அச்சுறுத்தும் அணுவாற்றலை அணு—ஆற்றலாகவுமாக்கி எல்லாத் துறைகளிலும் ஆக்கத்திற்குப் பயன்படுத்துவதில் முன் இருப்பான் என்ற நம்பிக்கை உணர்வினால் தேற்றப் பெறுகின்றது. O

www.thamizham.net - Free E book No 7422

## தி. பி. 2000 சிலைத்திங்கள் ௬௩-ஆம் நாள் பறம்புக்குடியில் நடைபெற்ற உலகத் தமிழ்க் கழக முதல் மாநாட்டில் பாவலர் திரு. பெருஞ்சித்திரனார் நிகழ்த்திய

# பாட்டரங்கத் தலைமையுரை.

(சென்ற இதழ்த் தொடர்ச்சி) பின்னுரை:

*பாவலர்கள் எல்லாரும் பைந்தமிழைப் பாய்ச்சிவிட்டார்;*
*நாவளங்கள் காட்டிவிட்டார்; நல்லுணர்வைத் தூண்டிவிட்டார்!*
*செந்தமிழின் எண்மைச் சிறப்பினையும் பாடலுற்றார்*
*எந்தமிழ்க்கே மேலுஞ்சீர் ஏற்றிவிட்டார்; உங்களொடு*
*யானுஞ் செவிமாந்தி இன்பத்தில் ஆழ்ந்திருந்தேன்!*
*தேனருவி பாய்ந்ததுபோல், தீங்குழல்யாழ் நல்லிசைபோல்*
*பாட்டருவி ஆடினோம்! ஆதலினால் பைந்தமிழீர்*
*நாட்டும் முடிவுரையும் நாகம்போல் காதுபுகும்!*
*ஆனாலும் சிற்சிலசொல்! ஆங்கொருவர் ஈங்கொருவர்*
*போனாலும் போகட்டும்! போக்கற்றார் கேட்கட்டும்!*
*முன்னுரையைக் கேட்டு முடிவுரையைக் கேளாதார்*
*என்ன பயனும் இலராகச் சென்றிருப்பார்!*
*செந்தமிழின் எண்மைச் சிறப்புரைத்த பாவலர்கள்*
*தந்த கருத்தில் தாராத சிறப்புசில*
*காட்ட விருக்கின்றேன்; காதலினால் இஃதுரைப்பேன்*
*நீட்டுகின்றேன் என்றாலும் நேயமொடு கேட்க:*

### தாய்மை

*இமிழ்கடல் நல்லுலகின் இற்றை இயல்பால்*
*தமிழ்க்கன்று–மங்கையர்க்கே தாய்மை சிறப்பில்லை.*
*கன்னியரும் வந்து கருத்தடைசெய் காலமிது!*
*மன்னுதமிழ்த் தாய்மை மறுக்கா திருப்பாரோ?*
*செந்தமிழ்த்தாய் வாய்த்தபெருந் தாய்மைச் சிறப்புரைக்கின்*
*இந்தியா ஆசியா ஏர்ந்த அமெரிக்கா*
*தென்கிழக்குத் தீவுகள் யாவிலுமே தேர்ந்தபசும்*
*பொன்கொழிக்கும் நாகரிகம் ஒன்று புலர்ந்ததுண்டே!*
*அக்காலம் இற்றைக்கே ஆறா யிரமாண்டு*
*முற்கால மாகும்! முதல்மாந்தக் கூட்டத்தின்*
*கற்கால மாகும்! கழிந்த சுமேரியத்தும்*

www.thamizham.net - Free E book No 7422

பொற்பழிந்த டைகரிசு யூப்பிரடீ சாற்றிடையும்
வாழ்ந்திருந்த மக்கள் வழங்கிநின்ற பேச்சினிலே
செந்தமிழும் வாழ்ந்த சிறப்பைஎவ் வாறுரைப்பேன்:
அந்தமிழே தாயாய் அனைத்து மொழிக்கெல்லாம்
வாய்ந்ததென்று கூறும் வரலாற்றை யார்மறுப்பார்?
தாய்தமிழை எண்ணித் தருக்குவதால் என்னபிழை?

ஓரா யிரத்திருநூ றாண்டுக்கு முற்பட்ட
ஆரியர் வேதத்தும் சாயம்,தா, முத்தென்னும்
சொற்கள் உளவென்றால் சொல்வதெவர் இல்லையென்று?
முற்கால பாபிலோன் மூத்த எபிரேயம்
நல்ல எகுபதியம் நண்ணும் அரபிமொழி
இன்னவற்றில் எந்தமிழ்ச்சொல் ஏற்றம் விளைத்ததென்றால்
அன்ன திலையென்பார் ஆர்?

(வேறு)

குப்பா என்பது ஜிப்பா என்றும்
கூலி என்பது ஒலிமா றாமலும்
ஞாலம் என்பதோ ஆலம் என்றும்
நீலம் என்பது நீலா என்றும்
கதம் என்பது கடப் என்றும்
நெருப்பு என்பது நபிர் என்றும்
அராபி மொழியில் வழங்கிய ஆட்சியும்;

அப்பன், செவ்வை. அம்மை, மெத்தை?
ஊர், பழம், சாய், மாறு என்பன முறையே
ஆப், ஷாவாஹ், ஏம்,மித் தாஹ்" என்றும்
ஆர், பெரி, ஷா,மூர் ஆகவும் திரிந்தே
அற்றை எபிரேயத் தின்தமிழ் ஆட்சியும்

அது- தெ;இரு- சுர்;தா-து;மனை- மென்;
செம்மை- சென்ப்;மாத்திரை- மெத்தர்;
நக்கு- லெக்கு;வாரி- மெர்-என்றும்
பண்டை எகுபதில் பைந்தமிழ் ஆட்சியும்
தமிழின் தாய்மையைக் காட்டும் அன்றோ?

இன்னும்

ஆப்பிரிக்கா அடுத்த நாடுகள் அனைத்திலும்
மூப்புற வழங்கும் செமிதிக் இனமாம்

www.thamizham.net - Free E book No 7422

அரமியம், கல்தேயம், சீரியம், பெர்சியம்;
அசீரியம், சுமாரித்தம், பொனிசியம் என்னும்
மொழிகளும் அவற்றின் கிளைமொழி தாமும்

ஆசி யாவில் தென்பால் வடபால்,
பகுதியில் வழங்கும் துரானிய இனமெனும்
தைக்கம், மலாயம், காங்கையம், முண்டா,
பர்மியம், சிங்களம், துருக்கியம், சீனம்,
பின்னிய மொழிகளும் கிளைமொழி தாமும்

இக்கால் இந்திய வடபால் வழங்கிடும்
ஒரியா, சிந்தி, வங்காளி, அசாமி,
பலுசியம், மராத்தி, பஞ்சாப்பி, கூர்க்கம்,
கோட்டு, கோண்டு, கூய்,ராசு மகாலி,
மாலடா, காசுமீரி, நேபாலி என்னும்
மொழிகளும் இவற்றின் கிளைமொழி தாமும்

தாய்தமிழ் பெற்ற சேய்மொழி என்ப,
ஆய்மதி மொழியியல் அறிஞர் தாமே!

## தூய்மை:

எந்தமிழ்த் தூய்மையை எடுத்துப் பேசின்
செந்தமிழ் உணர்வு சிலிர்சிலிர்த் தோடும்.
ஏறத் தாழ மூவா யிரமாண்(டு)
ஊறிக் கிடந்த வடமொழி உணர்வினுல்
மாறிக் கிடக்கும் தமிழனின் மனத்துள்
ஏறி மிதித்தது ஆங்கிலர் ஆட்சி!
பிற்கால் பிரஞ்சும் அதனொடு சேர்ந்தது.
போர்த்துக் கீசியம் அதன்பின் புகுந்தது.

மொகலாயர் ஆட்சியில் உருது முளைத்தது.
தகவுடைத் தமிழன் தமிழினை மறந்து
கலப்படத் தமிழினில் கால்கைப் பிடித்துப்
பிழைப்பை நடத்தினுன். அதற்குப் பின்னரும்
தமிழ்தன் தூய்மையில் துளிகெட விலையெனின்
அமிழ்தென இதனை அறைவதும் தவருே?

இத்தனைக் கலப்பினை ஒருமொழி ஏற்ருல்
இத்தனைக் காலத்து உருவம் இராது.
செந்தமிழ் முனைந்தால் இன்றையும் செழிக்கும்!

www.thamizham.net - Free E book No 7422

இந்திமற் றில்லைவே றெந்த மொழியொடும்
தூய்மை கெடாது துலங்குதல் தமிழே!
நோய்மை புகுத்திடில் தனித்தமிழ் நொடியும்!

சத்தியம் என்பதை உண்மை வாய்மை
மெய்ம்மை எனமூன்று சொற்கள் முழங்கும்!
ஊர்ஜிதம் நீங்கிடில் உறுதி உண்டு!
உபதேசம் போயின் அறிவுரை உண்டு.
அநுபவம் என்பதைப் பட்டறி வடக்கும்.
அகங்கா ரத்தினைச் செருக்கு நீக்கும்.
இரேகை போனால் வரைநின் றிலங்கும்.
இரகசியம் தன்னைக் கமுக்கம் காத்திடும்
எடுத்துக் காட்டுண்டு, உதாரணம் ஏகின்!
பரிசுத்தம் போனால் துப்புரவு ஆகும்.
பிறமொழிக் கலப்பை இன்று பிரிக்கினும்
உரமொழி, தூய்மை யுறுமொழி தமிழ்போல்
உலகினில் வேறெதும் இல்லென உணர்வீர்.

## இனிமை:

இனிமை என்பது தமிழின் மறுபெயர்
"இனிமைத் தமிழ்மொழி எமது-எமக்கு
இன்பந் தரும்படி வாய்த்தநல் அமுது-"
என்பார் பாவேந்தர்.
"இன்பத் தமிழ்போல் இனிதாவ தெங்கும்
காணோன்" என்பார் பாவலர் பாரதி!
தனிப்பால் கசக்குமோ? புளிக்குமோ தனித்தேன்!
தனித்தமிழ் அவைபோல் தருவது இனிமையே!
தனித்தமிழ் புளிப்பெனல் நாவினது தவறே!
ஒன்றால் அவன்நா ஒருமொழிக் கடிமை!
அன்றால் அவனுடை மனமயக் காகும்!
அதுவும் இல்லெனின் அறிவுச் செருக்கால்
புதுவது நயக்கும் புன்மையால் மொழிவான்!
மொழி இனிமையா? பாஷை,லாங் வேஜா?
முதுமை இனிமையா? வயோதிகம் சுவையா?
மனைவியா-தாரமா? மங்கையா-ஸ்திரியா?
நாம தேயமா? 'நேமா'-பெயரா?
உறவு இனிமையா? பந்துகள் வேண்டுமா?
அறமன் றம்மா? நியாய ஸ்தலமா?
இளமை இனிமையா? யௌவனம், யூத்தா?

www.thamizham.net - Free E book No 7422

குளிர்ந்த நீரா? தூத்தமா? ஜலமா?
உலகியல் *இனிமையா*, லோகா யதமா?
கலைமகள் இருக்கை*யா*, சாரதா பீடமா?
மந்தமா ருதமா? நல்லிளந் தென்றலா?
அந்தமா, முடிவா? ஆதி*யா* முதலா?
அங்கயற் கண்ணி*யா*; மீனலோ சனி*யா*?
பங்கஜம் பத்மமா? தாமரை முளரியா?
ஜனநா யக*மா*, மக்க ளாட்சியா?
மனம், உளம் *இனிமையா*? ஹிருதயம் *நன்று*?
ராஜாதி ராஜனு, மன்னர் மன்னனு?
ஜேஷ்ட புத்திரனு, மூத்த மகனு?
பேறு *இனிமையா*? பிரஸவம் *இனிமையா*?
சிரேஷ்டம் *இனிமையா*, சிறப்பு *இனிமையா*?
விவாஹக் கிரமமா? திருமண முறையா?
வேண்டு கோளா, விக்ஞா பனமா?
விஜயமா வருகை*யா*? விருக்ஷமா மரமா?
புஜமா தோளா? புஷ்பமா மலரா?
மயூரமா மயிலா? மார்க்க*மா* நெறி*யா*?
விரைவா ஜல்தி*யா*? விசாரணை*யா* உசாவ*லா*?
வருஷமா ஆண்டா? வருகையா ஆஜரா?
ஸ்நானமா குளிப்பா? ஸ்நேகமா நட்பா?
திவ்வியம் *தேவையா*? இனிமை *தேவையா*?
*இவ்வகை தொடர்ந்தே இயம்பிப் போகலாம்.*
*எனவே அன்பரீர் இனிமை என்பது*
*கனவோ நனவோ அன்று, தனித்தமிழ்*
*தனிச்சுவை பொதுளத் தான்நடப் பதுவே!*

## தனிமை:

*தனிமை என்பதும் தமிழ்மொழிச் சிறப்பே!*
*பனிமலை வரையே பரவிய மொழிகளுள்*
*இராச மாலம் குடகம் கோண்டு,*
*மகா ராட்டிரம் கூர்க்கம் இவற்றொடு*
*தெலுங்கம் கன்னடம் துளுமலை யாளம்*
*முதலிய திரவிட மொழிகள் பிரியினும்*
*தனித்து நிற்கும் தமிழ்மொழி போல*
*இனித்த மொழியினை எங்ஙன் காண்குவம்?*

www.thamizham.net - Free E book No 7422

## புதுமை:

புதுமை பேசலும் பொதுமை கூறலும்
மதுநிகர் தமிழ்க்கலால் மற்றதற் கியல்வதோ?
மூலத் தனிப்பெயர் எதுவா னாலும்
கோலத் தமிழில் கூறுதல் புதுமையே!

புகைவிடும் வண்டியைப் புகைவண்டி என்றது
பகையினாலா? புதுமையின் பயில்வா?
மிளகுபோற் காயை மிளகாய் என்றதும்
அழகுக் காகவா? புதுமையின் ஆய்வா?
இன்னும்
உருளைக் கிழங்கும் உந்து வண்டியும்
கருத்தடை, புகைப்படம், நாடாப் பதிவு,
திரைப்படம், வானொலி, அச்சு, தட்டச்சு,
இரையொலி பெருக்கி, இசைத்தட்டு, அஞ்சல்,
தொலைபேசி யோடு தொலைவரி, காட்சி,
வானூர்தி மற்றும் உந்தம், மிதிவண்டி,
வேதியல்; விளங்கியல், விலங்கியல் யாவும்
புதுமை நோக்கினால் புலர்ந்த சொற்களே!
எதுமுடி யாதென எவர்தாம் இயம்புவார்?
ஆரியப் பார்ப்பான் அப்படி மொழிந்தால்
சீர்சால் தமிழனும் சேர்ந்து மொழிவதா?

## பழமை:

புதுமை என்பதால் தமிழ்மொழிப் பழமை
கதையெனக் கதைப்பதா? கதைப்பது நாமா?
ஆரியக் கதைப்புக் களவொன் றேது?
பூரியர் பொய்மைப் புராணங்கள் கூறும்.
தென்தமி ழகமே மக்களின் தொட்டில்!
அந்தமிழ் பிறந்து-ஐம் பதாயிர மாண்டுகள்
ஆயின என்பதை அறிஞர்க் கறிஞர்
மொழிநூல் முதுவர் பாவாணர் மொழிவர்.
பழமைக்கும் பழமையாய்ப் பைந்தமிழ் வாழ்வதைக்
கிழமையால் தமிழ்மொழிக் கிளர்வினால் அன்று,
நுண்மாண் நுழைபுல வன்மையாற் கண்டார்!
பன்மொழி யறிஞரும் பகர்ந்த கூற்றிது.
'உணர்ச்சி மிகுதியால் உரைப்பதால், தமிழர்
அறிவிற் குறைந்தவர்' என்று மொழிவார்

www.thamizham.net - Free E book No 7422

சட்டர்சி என்னும் வடமொழிச் சார்பினர்.
திட்டமாய் அவர்க்குத் தெரிவித் திடுவோம்;
உணர்ச்சி உள்ளவர் தமிழர் என்றால்
உணர்ச்சி யற்ற உருவமா சட்டர்சி?
'உணர்வது உடையார் முன்சொலல்' என்று
நுணங்கிய அறிவினர் வள்ளுவர் நுவன்றது
அறிவிலை என்றே அவர்மொழி வாரா?
செறிவிலா துரைப்பது செப்பமென் பாரா?
சட்டர்சி போன்ற வடமொழி அடிமைகள்
இட்டதே சட்டம் இயன்றதே உண்மை
என்பது அரசியல் ஏற்றத்தால் வந்தது.
தின்பதற் கேதேனும் சொல்ல வேண்டுமே!

(தொடரும்)

## 'தென்மொழி' தாளிகையின் வெளியீட்டு அறிக்கை.

(நடுவணரசுச் செய்தித்தாள் பதிவுச் சட்டம் 1956,
19 ஈ(ஆ) வகுப்பு, 8-ஆம் கட்டளைப்படி)

1. வெளியிடும் இடம்: கடலூர்-1,
2. காலமுறை: திங்கள் ஒருமுறை.
3. அச்சிடுவோர் பெயர்: மா. தாமரை.
   இனம்: தமிழர்.
   முகவரி: தென்மொழி அச்சகம், கடலூர்-1.
4. வெளியிடுவோர் பெயர்: திரு. பெருஞ்சித்திரன்.
   இனம்: தமிழர்.
   முகவரி: தென்மொழி அச்சகம், கடலூர்-1.
5. ஆசிரியர் பெயர், முகவரி: திரு. பெருஞ்சித்திரன், கடலூர்-1.
6. ஒரு விழுக்காட்டிற்கு மேல் முதலீடு செய்துள்ள தாளிகை உரிமையாளர், கூட்டாளர் இவர்தம் பெயர்களும், முகவரிகளும்: திரு. பெருஞ்சித்திரன், கடலூர்-1.

பெருஞ்சித்திரனாகிய நான் மேலே குறிக்கப்பட்டுள்ள விளக்கங்கள் யாவும் நானறிந்தவரை உண்மையென்று இதன்வழி உறுதி கூறுகின்றேன்.

1—3—70
கடலூர்-1.

-பெருஞ்சித்திரன்.
(ஒப்பம்)

www.thamizham.net - Free E book No 7422

(சுவடி 7–ஓலை 7 இன் தொடர்ச்சி)

# அறிவியற் கலைச்சொற் பட்டி-5

-அழகப்பர் தமிழ் மன்றம், காரைக்குடி.

Soft Water-மென்னீர்

Sodium-உவர்மம்

Soilborn Diseases } மண்ணுறை நோய்கள்

Solid-திண்மம்

Solute-கரைபொருள்

Solution-கரைசல்

Solve-தீர்; சிக்கலறு

Solvent-கரைப்பான்

Sonorous-முழக்கமான, ஒலிமிகுந்த

Sound-ஒலி

Source of Heat-வெப்பக் கிடங்கு

Space-விண்வெளி

Space Ship-விண்வெளிக்கப்பல்

Spanner-மறைத்திருகி

Specific Fuel Consumption } சீர்எரிபொருட் செலவு

Specific Heat-வெப்பஎண்

Spectral Line-நிறமாலைக் கோடு

Spectrograph-நிறமாலைப் பதிவி

Spectroscope-நிறமாலைக் கருவி

Spectrum-நிறமாலை

Speed-விரைவு

Spontaneous Combustion } தன்னியக்க எரிவு

Standard-தரப்பொதுவரை

Star Connection-கவை இணைப்பு

Starter-தொடக்கி

State-நிலை

Statics-நிலையியல்

Steam-கொதிநீராவி

(Water Vapour-நீராவி)

(Wet Steam-ஈரக்கொதிநீராவி)

(Dry Saturated Steam-முற்றுலர் கொதி நீராவி)

(Super Heated Steam-மீவெப்பக் கொதிநீராவி)

(Degree of Super Heat-மிகை வெப்பூட்ட அளவு)

(Dryness Fraction-உலர்வுக் கூறு)

Steam Table-கொதி நீராவிக் கையேடு

Stimulant, தூண்டி

Stirrups-அங்கவடிகள்

Store Room-பண்டகம், பண்டாரம்

String Course-பிதுக்கப்படை

Stress-தகைவு

Structure-அமைப்பு

Sub Multitude-கீழ்மடங்கு

Sub-soil Water-நிலநீர்

www.thamizham.net - Free E book No 7422

Sphere-கோளம்
Spherometer-வட்டமானி
Splean-மண்ணீரல்
Sulphur Dioxide-கந்தக ஈருயிரி
Sulphuric Acid-கந்தகக்காடி
Sulphur Trioxide-கந்தக மூவுயிரி
Sun-Shade-வெயில்மறைப்பி
super Heater-மிகைவெப் பேற்றி
surface Colour-புறநிறம்
surface Tension-படல இழுவிசை
survival of the Fittest தக்கவை பிழைத்தல்
susceptance-மின்னிணைபு
synchronisation-தகைநிலே ஓர்மை
synorra Fluid-மூட்டுநீர்
struggle for Existence வாழ்க்கைப் போராட்டம்

T

Tadpoles-தலைப்பிரட்டைகள்
Tape Recorder-நாடா ஒலிப் பதிவி
Telepathy-தொலைவிலுணர்தல்
Temperature Co-efficient வெப்பத்தடை குணகம்
Tensile Zone-இழுவைப் பகுதி
Terrace-மொட்டைமாடி
Tetrode-நாமின்வாயி
Theoretical Branch | கொள்கைத் துறை

Sulphate-கந்தகநாலுயிரி
Sulphide-கந்தகி; கந்தகை
Sulphur-கந்தகம்
Tongued and grooved Joint } நாக்குப் பிடிப்பு இணைப்பு
Torque-முறுக்காற்றல்
Torsion—முறுக்கம்
Total Differentiation } முழுத் துகட்பாடு
Toughness-உறுதித்தன்மை
Tourist Bangalow } விருந்தில்
Tower Bolt-தாட்கோல்
Toxic substance-நச்சுப் பொருள், மயக்கப்பொருள்.
Transluscent Film-ஒளியுருவற் படலம்
Tragectory-எறிவழி
Transmutation of Elements | தனிம மாற்றம்
Transparent (Film) ஒளியூடு (படலம்)
Transformer-மின்மாற்றி
Transverse Wave-குத்ததிர்வலை
Trap-பாளக் கருங்கல்
Trial Pit-ஆய்வுக்குழி
Triode-மூமின்வாயி
Truss-தூலக்கட்டு
'T' Type Filter-தேக்கவகை வடிப்பான்
Tumours-கட்டிகள்
Tune-சுரஓர்மை
Tuning Fork-அதிர்வுக்கவை
Twist-முறுக்கு

www.thamizham.net - Free E book No 7422

Thermal Cracking | வெப்பப் பகுப்பு

Thermogram-வெப்பப்படக் கருவி

Time Relation-காலத் தொடர்பு

Underground (a) Cables | புதைக்கடத்தி வடம்

(b) Drainage-புதைவடிகால்

Underwater Television | ஆழ்கடல் தொலைக்காட்சி முறை

Uniform Flow-சீரோட்டம்

Unit-அலகு

Unit Quantity-ஒற்றை யளவு

Universe-புடவி

Upright stand-செந்தாங்கி

Urinary Calculi-சிறுநீரகக் கற்கள்

V

Valency-இயைபெண்

Value { Negative-எதிர்மதிப்பு
Positive-நேர்மதிப்பு

Van Allen Belts | வான் ஆலன் மின்பட்டைகள்

Vapour-ஆவி

Vapour Pressure-ஆவியழுத்தம்

Varnish-மெருகுநெய்

Velocity-செலவு

Ventilator-காற்றுவாரி

Vertical-Focussing | குத்துக் குவிப்பு

U

Ultimate Load-இறுதிப்பாரம்

,, strength-இறுதி வலிமை

Ultra Violet Ray-புறஊதாக் கதிர்

W

Water gas-நீர்வளி

Water Tube Boiler-நீர்க்குழற் கொதிகலன்

Wave Form-அலையுரு

Wave Length-அலைநீளம்

Wave Theory of Light | ஒளியலைக் கொள்கை

Wax-மெழுகு

Weight-எடை

White Lead-ஈயவெள்ளை

Wild Life sanctuary | காட்டுவிலங்குப் புகலிடம்

Work-வேலை

X

X-Ray-புதிர்க்கதிர்

X-Ray Photograph | புதிர்க்கதிர் ஒளிப்படம்.

Y

Yielding-நெகிழ்தல்

Z

Zero-சுழி

Zinc-துத்தநாகம்

Zinc-Oxide | துத்தநாக உயிரி

Zone-பிரிவு,வட்டாரம்

(முற்றும்)

www.thamizham.net - Free E book No 7422

(அறிவியற் கலைச்சொற்பட்டி-பிற்சேர்க்கை)

Venus-வெள்ளி
Vibrator-அதிர்ப்பி
Violet-செந்நீலம், கத்திரிப்பூ நிறம்
Viscosity-பாகுத்தன்மை
Vitamin-உயிர்ச்சாரம், உயிரம்
Viper-snake-விரியன் பாம்பு
Virtual Work-போலி வேலை
Volatile Matter-ஆவியாகு பொருள்
Voltmeter-மின்னழுத்தமானி
Volume-கொண்மை


மொழிப்பேரறிஞர். தேவநேயப் பாவாணரின்

## திருக்குறள் தமிழ் மரபுரை

விலை உரு. 15-00

கிடைக்குமிடம்- திரு. தே. மணி,
ஆ-1135, இரண்டாம் மேற்குக் குறுக்குச்சாலை,
காட்டுப்பாடி விரிவு (வ. ஆ.)

பாவலர். பெருஞ்சித்திரனாரின்

## அரிய தமிழ் நூல்கள்

| | | | உரு. காசு. |
|---|---|---|---|
| 1. | பாவியக்கொத்து | விலை | 2 — 50 |
| 2. | எண்சுவை எண்பது | ,, | 1 — 50 |
| 3. | புரட்சிப்பாவலர் பாரதிதாசன் | ,, | 0 — 50 |

அஞ்சற் செலவு தனி.

கிடைக்குமிடம்:- தென்மொழி மின் அச்சகம், கடலூர்-1.


www.thamizham.net - Free E book No 7422

# விலங்குகளின் உறங்கும் பழக்கங்கள்

-ந. முத்துக்குமரன், அறி. இ., ஆ. ப.,

நீளுறக்கம் (Hibernation) என்னும் சிறிது புதிரான நிகழ்ச்சி பற்றிய சில முகாமையான ஆய்வுகளைத் தவிரக் கடந்த காலத்தில் விலங்கு களின் உறங்கும் பழக்கங்களைப் பற்றி அறிவியலறிஞர்கள் அவ்வளவாக ஆராய்ந்திலர்.

நீளுறக்கம் என்றால் என்ன? சில விலங்குகள் ஒரு குறிப்பிட்ட பருவம் முழுவதும் செயலற்ற நிலையிலிருக்கின்றன. அவற்றின் உள்ளத் துடிப்பு, மூச்சுவிடல், செரிமானம் (Digestion) முதலியவை மெதுவாக நடைபெறும். உடல் வெப்பம் மிகத்தணிந்து விடும். இதை விலங்கியலார் நீளுறக்கம் என்பர். மறுபடியும் ஏந்தான பருவம் வரும்பொழுது அவை பழையபடி செயல்படத் தொடங்குகின்றன. சில வகை அணில்களும், வௌவால்களும் குளிர்ப்பருவம் முழுவதையும் இவ்வாறு கழிக்கின்றன. கரடி, சிப்மங்கு (Chipmunk) முதலிய விலங்குகள் குளிர்காலத்தில் ஒரு பகுதியைமட்டும் இவ்வாறு செயலற்ற நிலையிற் கழிக்கின்றன. பல பாம்புகள், தவளைகள், தேரைகள், ஆமைகள் முதலியனவும் நீளுறக்கம் கொள்கின்றன. நத்தைகள் கோடைக்காலத்தில் இவ்வாறு செயலற்ற நிலையிலிருக்கின்றன. மரக் கிளைகளிலும் பாறைகளிலும் அவை ஒட்டிக்கொண்டிருப்பதைக் காணலாம். மழைப்பருவம் வந்ததும் மீண்டும் செயல்படத் தொடங்குகின்றன.

அண்மைக்காலம் வரையில் விலங்குகளின் உறங்கும் பழக்கங்களைப் பற்றி ஆராய்ந்தவர்களும், அவற்றை இரவிற் செயல்படுவன (Nocturnal) பகலிற் செயல்படுவன (Diurnal) என்று வகைப் படுத்தியதோடு அமைதி யடைந்தனர். ஆனால் புதிய ஆய்வுகள் இவ் வகைப்பாடு எல்லா நிலைகளிலும் பொருந்துவதில்லை யென்பதைக் காட்டுகின்றன.

விலங்குகளும் மாந்தனைப் போன்றே உறங்கி ஓய்வு கொண்டு, விழித்துச் செயல்படுகின்றன என்றே பொதுவாக எண்ணுகின்றோம். பெரும்பாலான மாந்தர் பகலிற்றொழில் செய்து இரவிற் றுயில்கின்றனர். இரவில் வேலைசெய்யும் தொழிலாளர்களும், இரவில் தூங்குமளவுக்குப் பகலில் தூங்கிச் சரிக்கட்டிக்கொள்கின்றனர்.

www.thamizham.net - Free E book No 7422

இவ்வாறே பகலிற் செயல்படும் விலங்குகள் இரவு முழுவதும் உறங்குகின்றன வென்றும் இரவிற் செயல்படுவன பகல் முழுவதும் உறங்குகின்றன வென்றும் எண்ணிக் கொள்வது இயல்பே. ஆனால் அண்மையில் நடத்தப்பட்ட ஆராய்ச்சிகள் நம் எண்ணம் தவறு என்று உறுதிப்படுத்துகின்றன. பல விலங்குகள் நெடுநேரம் தொடர்ந்து உறங்குவதற்கு மாறாகச் சிறுசிறு இடைவேளைகளில் சிறுதுயிலே (Nap) கொள்கின்றன.

சிறந்த எடுத்துக்காட்டு: வயலில் வளைதோண்டி வாழும் எலி இதற்கு நல்ல எடுத்துக்காட்டாகும். எலிகள் இரவிற் செயல்படுவன வென்று வகைப்படுத்தி யிருந்தனர். ஆனால் அவை 24-மணி நேரமும் உறக்கமும் விழிப்புமாக மாறிமாறிச் செயல்படுகின்றன என்பதை அவற்றின் இயல்பான இருப்பிடத்திலேயே ஆய்ந்தவர்கள் கண்டனர்.

மூன்று மணிநேர உறக்கமும் மூன்று மணிநேர விழிப்புமாக மாறி மாறி நடப்பது ஒருவகைத் தாளம் (Rhythm) போலமைகின்றது. இந்தத் தாளம் ஒரு நாளில் எந்த நேரத்தில் தொடங்குகின்றது என் பதைச் சொல்லமுடியாது. ஏனெனில் ஒவ்வோர் எலிக்கும் இத்தாளத் தொடக்க நேரம் ஒவ்வொரு வகையாக இருக்கின்றது. மற்றபடி மூன்று மணிநேர விழிப்பு மூன்று மணிநேர உறக்கம் என்ற தாளம் நன்கு பின்பற்றப்படுகின்றது. ஒரு சிறு வேறுபாடு. 24-மணி நேரத் தில், இரவில் வரும் விழிப்பு வேளைகளில் மிகச் சுறுசுறுப்பாக இருப்ப தாகத் தெரிகிறது. இவ்வாறு மூன்று மணிநேர விழிப்பைத் தொடர்ந்து வரும் மூன்று மணிநேர உறக்கம் என்ற முறையானது இவ்விலங்கின் வாழ்நாள் முழுவதும் தடையில்லாமல் தொடர்ந்து நடக்கின்றது.

ஆனால் இரவிற் செயல்படுவனவற்றிற் சேர்க்கப்பட்டுள்ள மூஞ் சுறுவுக்கு இந்த உறக்க-விழிப்புத் தாளநேரம், விலங்குக்கு விலங்கு 2 முதல் 4 மணிவரை வேறுபடுகின்றது. அகழெலிகளை ஆய்ந்தவர் கள் 6 மணிநேர உறக்கத்தைத் தொடர்ந்து 6 மணிநேர விழிப்பு என்று தாளம் அமைவதைக் கண்டனர். நீர் அகழெலிகள் 4 மணி நேர உறக்க-விழிப்புத் தாளம் போடுகின்றன.

வயல் எலியோ அல்லது மூஞ்சுறுவோ இரவு அல்லது பகல் முழு வதும் தொடர்ந்து தூங்குமாயின், அது தன் உடல் வெப்பத்தைக் கதிர்வீசலினால் இழந்து இறந்துவிட நேரிடும். இதைக் குளிர்ப்பட்டினி (Cold starvation) என்பர். சில எலிகளின் உடம்பிற் காயமெதுவு மின்றி இறந்து கிடப்பதன் காரண விளக்கம் இதுதான்.

www.thamizham.net - Free E book No 7422

முள்ளெலியை அறிஞர் கும்பகர்ணன் என்று நினைத்திருந்தனர். ஆனால் அது குறைவான நேரமே உறங்குகின்றது என்பது தெரிய வந்திருக்கின்றது. முள்ளெலியை இரவிற் செயல்படுவதாக வகைப் படுத்தியிருந்தனர். ஆனால் அஃது அடிக்கடி பகலிற் காணப்பட்டது. ஆய்வுகள் அவை சிறுதுயிற் கொள்கின்றன என்பதை விளக்கின.

வளைதோண்டி வாழக்கூடிய கரடி யினமொன்று இரவிற் செயல் படுவதாக அறுதியிட்டுக் கூறியிருந்தனர். ஆனால் அக்கரடியினம் பகல்வேளைகளில் இரைதேடி யலைவதைக் கண்டனர். தொடர்ந்து ஆய்வுசெய்து வருகின்றனர். ஆனால் இவற்றினிடம் உறக்க–விழிப்புத் தாளம் காணப்படுகின்றதா என்பது அறிவிய லடிப்படை யில் இன்னும் உறுதிப்படுத்தப்படவில்லை.

மீனுறக்கம்: மீன்கள் உறங்குவதில்லை. அவை அரை–மசணை நிலையில் ஓய்வு கொள்கின்றன என்று ஒரு காலத்தில் விலங்குநூலார் கருதிவந்தனர். மூழ்கு கூண்டுகளின் உதவியால் மீன்களை அவற்றின் இயல்பான சூழ்நிலைகளில் ஆய்ந்தனர். சில இன மீன்கள் கடல் அல்லது ஆற்றுப் படுகைகளின் மீது அள்ளைப் பக்கமாகச் சாய்ந்து உறங்குகின்றன என்ற வியத்தகு உண்மை வெளியாயிற்று.

கிளிமீன் என்ற ஒருவகை மீன் இருக்கிறது. இது படுக்கச் செல்லுமுன் இரவுடை தரிக்கின்றது. கிளிமீன் மாலையில் ஒருவகை நீர்மத்தைச் சுரக்கின்றது. அந்நீர்மம் மீனைச்சுற்றிலும் கண்ணாடித் தாட்டைப் போன்று சூழ்ந்துகொள்கின்றது. இந்தக் காற்றுப்பூதி போன்ற இரவுடையின் முன்புறம் ஒரு சிறிய திறப்பு இருக்கிறது. இதன் வழியாக நீர் வருகின்றது. அந்நீரிலிருந்து உயிரகத்தைப் பிரித்து மீன் மூச்சுவிடுகின்றது.

வேறுசில மீன்கள் கற்களினடியில் வளைதோண்டி உறங்குகின்றன. பெரும்பாலான மீன்கள் சிறு துயிலே கொள்கின்றன. கிளிமீன் போன்ற சிலவகை மீன்கள்மட்டுமே நீண்டநேரம் உறங்குகின்றன.

கடலில் வாழும் பாலூட்டிகளில் ஒன்றான கடல்ஆ (Dolphin) தூங்குவது இன்னும் வியப்பாயிருக்கும். சிறைப்பிடிக்கப்பட்ட கடல் ஆக்களை இரவு பகலாக உற்றுநோக்கி வந்தபொழுது, அவை இருபத்து நான்குமணி நேரத்தில் இரண்டுமணி நேரமே தூங்குகின்றன என்பது தெரியவந்தது. இதிலென்ன வேடிக்கையென்றால், தூங்கும் கடல்ஆ ஒரு சமையத்தில் ஒரே கண்ணைத்தான் மூடிக்கொள்கின்றது.

www.thamizham.net - Free E book No 7422

**உருவமும் உறக்கமும்:** ஒரு விலங்கு பகலிலுறங்குகின்றதா அல்லது இரவிலுறங்குகின்றதா, நெடுநேரம் உறங்குகின்றதா அல்லது சிறுதுயில் கொள்கின்றதா என்பவற்றிற்கும் அதன் உருவத்திற்கும் அவ்வளவாகத் தொடர்பில்லையெனத் தெரிகிறது. இதற்கு நம் கால்நடைகளே சான்று. மாடுகள் பகலிற் கொஞ்ச நேரம் மேயும்; கொஞ்சநேரம் படுத்து அசைபோட்டுக்கொண்டு ஓய்வுகொள்ளும். இரவிலும் இவ்வாறே சிறிதுநேரம் உணவு கொள்ளல், சிறிது நேரம் அசைபோட்டு ஓய்வு கொள்ளல் என்ற முறைப்படி நடப்பதைக் காணலாம்.

நிலத்தில் வாழும் பாலூட்டிகளிற் பெரியது யானை. ஆனால் அது 24 மணிநேரத்தில் 4 மணி நேரமே உறங்குகின்றது, அதிலும் 2 மணிநேரமே ஆழ்ந்து உறங்குகின்றது. ஏதோ சில வேளைகளில் பகலிலும் நின்றுகொண்டே சிறிதுநேரம் கண்ணயர்வது உண்டு.

பறவைகள் பொதுவாக நாம் நினைப்பதைவிடக் குறைவான நேரமே தூங்குகின்றன. மாலையில் இறக்கைக்குள் தலைவைத்துறங்கத் தொடங்கும் பறவைகள் காலையில்தான் விழிக்கின்றன என்று நம்மிற் பலர் நினைக்கின்றனர். ஆனால் பறவைகள் நாம் முன்னர்க் கூறிய சிறு பாலூட்டிகளைப் போன்று சிறுதுயிலே கொள்கின்றன. இதைத்தான் தமிழில் "கோழித் தூக்கம்" என்கிறோம். கூண்டுகளில் பறவை வளர்ப்போர் அவை இரவில் விழித்திருப்பதைக் கண்டிருக்கக் கூடும். பழக்கப்படுத்தப்படாத காட்டுப்பறவைகளின் நிலையும் இதுதான். பறவைகள் பிற்பகலில் சிறுதுயில் கொள்வதால், பிற்பகல் வேளைகளில் காடுகளும் வயல்வெளிகளும் அமைதியாக இருப்பதைக் காணலாம். மிகப் பெரும்பாலான பறவைகள் சிலவேளைகளில்தாம் ஆழ்ந்து உறங்குகின்றன வென்பது கூர்ந்து உற்றுநோக்கியதிலிருந்து தெரியவருகின்றது.

**கூண்டிலடைபட்டவை:** காட்டில் வாழும் விலங்குகளின் உறங்கும் நேரத்தைவிட அதே இனத்தைச் சேர்ந்த கூண்டிலடைபட்ட விலங்குகளின் உறங்கும் நேரம் மிகுதியென்ற குறிப்பிடத்தக்க உண்மை, காட்சிச் சாலைகளிலுள்ள விலங்குகளின் உறங்கும் பழக்கங்களை நன்கு உற்று நோக்கியதில் விளங்கியது. காட்டுவிலங்குகளுக்குச் சிறுதுயில் என்பது தற்காப்புக்கு ஒரு வழியென்பது புலப்படுகின்றது.

www.thamizham.net - Free E book No 7422

காட்டிற் கவலையில்லாமல் ஆழ்ந்துறங்கிக்கிடக்கும் ஒரு விலங்கு பசியோடிருக்கும் பகைக்கு எளிதிலிரையாகும். துடுக்குத் துடுக் கென்று "கோழித்தூக்கம்" தூங்கிக் கொண்டிருக்கும் விலங்குகள் எதிரியை எளிதில் அறிந்து தப்பித்துக் கொள்ளலாமன்றோ!

இதுவரை விலங்குகளின் உறங்கும் நேரம் பற்றிப் பார்த்தோம். இனி அவற்றின் உறங்கும் நிலைபற்றிக் காண்போம். வழக்கமாக, மாந்தன் முதல் எல்லா விலங்குகளும் ஏந்தான (வசதியான) இடமும் சூழ்நிலையும் கிடைத்த பொழுதுதான் உறங்குகின்றன. தம் உடலை யும் ஏந்தான நிலையில் வைத்துக் கொள்கின்றன. பெரும்பாலான விலங்குகள் படுத்துக் கண்மூடி உறங்குவதையே நாம் காணுகிறோம். ஆனால் சில விலங்குகள் இயல்புக்கு மாறான நிலையில் உறங்குகின் றன.

குதிரையை உறங்கும்போது பாருங்கள். ஒரு காலைச் சிறிது மடக்கியவாறு மூன்றுகாலால் நின்றுகொண்டே உறங்குகின்றது. மாந்தனால் நின்றுகொண்டு உறங்க முடியுமா? அப்படி யுறங்கினால் அவன் சமநிலையை இழந்துவிடுகின்றானில்லையா? ஆனால் குதிரை மட்டும் எப்படி நின்றுகொண்டே உறங்க முடிகின்றது? அது படுத்து உறங்க முடியாதா? முடியும். சில வேளைகளில் படுத்தும் உறங்குகின்றது. படுத்துறங்கினால் அதன் உடற்கனம் தசைகளை அமுக்கி நுரையீரலுக்கு இடைஞ்சல் கொடுக்கின்றது,

அது நின்றுகொண்டே துயிலும் பொழுது ஒருவகைத் தசை யியக்கம் (Muscular Action) அதன் கால்மூட்டுகளை நேராக நிறுத்திச் சமநிலையைக் கொடுக்கின்றது. ஒரு சிறு இடரின் அறிகுறி தென்படினும் உடனே விழித்துக் கொள்கின்றது. இதனால்தான் சிலர் குதிரை உறங்குவதே இல்லை என்று சொல்வதைக் கேட்டிருக்கலாம்.

தென் அமெரிக்கக் கரடி (Sloth) உறங்குவதைப் பார்க்க வேடிக் கையாயிருக்குமாம். இவை வெப்பமண்டலக் (Tropical) காடுகளில் வாழ்கின்றன. இவை மரக்கிளைகளைத் தம் பின்னங்கால்களால் பற் றிக்கொண்டு, தலைகீழாகத் தொங்கிக்கொண்டே துயில்கின்றன. இப்படி ஒரு நாளைக்கு 18 மணிநேரம்! இவை சரியான சோம்பேறிகள். இவை விழித்துக் கொண்டிருக்கும்போதே அரைத்தூக்கத்திலிருப்பது போலத்தோன்றும். இவை மெதுவாக ஆடியசைந்து நடப்பதால் உடலில் மிகுதியான இயக்கமிருக்காது இதனால் இவற்றின் உடல்

www.thamizham.net - Free E book No 7422

மயிர்களுக்கிடையில் சில பாசியினப்பயிரினங்கள் படர்ந்து வளர் கின்றன.

ஆப்பிரிக்க யானைகள் இளமைப் பருவத்திற் படுத்தே உறங்கு கின்றன. ஆனால் வளரவளர அவற்றின் உடற்கனம் மிகுகின்றது. அத னால் அவை படுத்தால் தம் உடலைத் தூக்கி எழ முடிவதில்லை போலும்! இதனால் வளர்ந்த யானைகள் தம் வாழ்நாள் முழுவதும் நின்று கொண்டேஉறங்குகின்றன. இவ்வாறு முப்பது நாற்பதாண்டுக்காலம் உறக்கத்திலும் விழிப்பிலும் இரவு பகலாக நிற்கவேண்டியிருக்கின் றது! இரங்கத்தக்க நிலை!

ஆசிய யானைகள் படுத்துறங்கவே விழைகின்றன. காலை 10 மணி முதல் மாலை நான்குமணி வரையிலும், இரவு பதினொருமணி முதல் காலை மூன்றுமணி வரையிலும் ஒரு நாளுக்கு இரண்டுமுறை உறங்கு கின்றன. ஆப்பிரிக்க யானைகள் அச்சங் காரணமாக நின்றுகொண்டு உறங்குகின்றனவென்றால், ஆசிய யானைகள் அவற்றைவிடத் துணி வானவையா? அல்லது சோம்பேறிகளா? எப்படி வேண்டுமானாலும் வைத்துக்கொள்க.

வாலில்லாக் குரங்குகளும் (Apes), குரங்குகளும்–மாந்தனைப் போன்றே–ஏந்தான இடத்தையும் நிலையையும் தேடுகின்றன. சுமத் திராவில் மாந்த உருவுடைய ஒருவகை வாலில்லாக் குரங்கினமிருக் கின்றது. அவை மரக்கிளைகளுக்கிடையில் இலைகளைக் கொண்டு மெத்தைபோன்ற படுக்கை அமைத்து அதன்மீது படுத்துறங்குகின் றன. மழை வந்தால் இலைகளை மேலே போட்டுக்கொண்டு தொடர்ந்து உறங்குமேயன்றி விழித்தெழுவதில்லை.

இதேபோன்று 'கொரில்லா' என்றொரு வகை வாலில்லாக் குரங் கின் குட்டிகளும் ஒப்புகொள்ள மரக்கிளைப் படுக்கையமைக்கின்றன. ஆனால் வளர்ந்த கொரில்லாக்கள் [ஏறத்தாழ 40 கல்லெடை நிறையுள் ளவை] நாள் முழுவதும் அலைந்து திரிந்த பின்னர் மரத்தின்மீது ஏற முடிவதில்லை. ஆதலால் இவை இலைதழைகளைப் பொறுக்கி மரத்தடி யில் இருக்கையமைத்து அதன் மீதமர்ந்து, அடிமரத்தில் சாய்ந்த வாறே உறங்கி விடுகின்றன.

யானை குதிரைகளைப் போன்றே பறவை, கோழிகளும் நின்று கொண்டே உறங்குகின்றன. கடுமையான காற்று வீசும்பொழுது

www.thamizham.net - Free E book No 7422

கூடப் பறவைகள் கிளை கொம்புகளின்மீது அமர்ந்தவாறே (நின்று கொண்டே) விழாமல் உறங்குவது இயற்கையின் வியப்புதானே!

இஃதெப்படி இயலுகின்றது? பறவையின் உடற்கனம் கணுக்கால் மூட்டுகளை அழுத்தி வளைக்கின்றது. இதனால் விரல்களிலுள்ள தசை நாண்கள் விறைத்துக் கொள்கின்றன. விறைப்பாக உள்ள விரல்கள் மரக்கொம்புகளை வளைத்து இறுக்கிப் பிடித்துக்கொள்கின்றன.

பாம்புகளின் இமைகள் நிலையாகப் பொருத்தப்பட்டவை. ஆதலால் இவை கண்களை மூடவோ திறக்கவோ முடியாது. ஆனால் இவை உறங்குகின்றனவென்று வல்லுநர்கள் கூறுகின்றனர். ஆயின் ஒரு சிறிய அரவமும் அவற்றை விழித்தெழச் செய்யும்.

பாலூட்டிகளில் மிகப் பெரியது திமிங்கிலம். இதன் நுண்ணறிவும் மிகுதி. மாந்தனைப் போன்றே இதற்கும் நல்ல ஓய்வு தேவையென்பது சில வல்லுநர் கருத்து.

ஆனால் திமிங்கிலத்தின் உறங்கும் பழக்கம் இன்னும் புதிராகவே யிருக்கின்றது. கடல் ஆக்களைப் போன்று மல்லாந்து திரும்பிக்கொண்டு மரக்கட்டைபோல மிதந்துகொண்டே உறங்கும்போலும்! இதனால்தான் சில வேளைகளில் இரவிற் செல்லும் கப்பல்கள் திமிங்கலங்களில் மோதிக் கொள்கின்றனவென்று சொல்கிறார்கள்.

ஏன் இப்படிச் சில விலங்குகள் இயல்முரணான நிலைகளில் உறங்க வேண்டும்? விலங்குகளின் உறங்கும், உண்ணும் பழக்கங்கள் முதலாய ஒவ்வொரு பழக்கத்தையும் ஆய்ந்தால் விலங்குகளுக்கிடையே வாழ்க்கைப் போராட்டம் [Struggle for Existance] நடைபெறுவதும், அவற்றில் தகுதியுடையன தப்பிப் பிழைப்பதும் [Survival of the Fittest] விளங்கும். இது விலங்குகளின் இயல்பூக்கங்களில் [Instincts] தலையாய ஒன்று. வாழ்க்கைப் போராட்டத்தில் தப்பிப் பிழைக்க வேண்டுமென்ற இயல்பூக்கமே, விலங்குகளை இயல்முரணான நிலையில் உறங்கவைப்பதாகக் கொள்ளலாமன்றோ! O

---

**தனித்தமிழ்ச் செய்தித்தாள் திட்டத்தில்**
**நீங்கள் ஓர் உறுப்பினராகி விட்டீர்களா?**
**இல்லையெனில் இன்றே உறுதிமொழி அளியுங்கள்.**

www.thamizham.net - Free E book No 7422

# செய்தியும் அறிக்கையும்

**செய்தி எண்: உ. த க. 2/3/2001.**

## 1. கழகச் செய்திகள்.

கீழ்க்காணும் ஊர்களிலும் நகரங்களிலும் உலகத் தமிழ்க் கழகக் கிளைகள் தொடங்கப்பெற்றுச் செயற்பட்டு வருகின்றன. ஆங்காங்குள்ள அன்பர்கள் விரும்பின், அவற்றில் உறுப்பினராகச் சேர்ந்து நாட்டுத் தொண்டும் மொழிப்பணியும் புரியுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

### க. தென்னார்க்காடு மாவட்டம்

(அ) பெத்தாசமுத்திரம் ஊர்க்கிளை: தொடக்கம்: 7—1—70; தலைவர்: திரு வி. அன்பரசன்; செயலர்: திரு. த. மருதை; பொருளர்: திரு. சோ. கதிரவன்.

(ஆ) கொளக்குடி ஊர்க்கிளை: தொடக்கம்: சுறவம் உஎ; தலைவர்: திரு. இராம. கோபால்; செயலர்: திரு. வ. அருள்சாமி; பொருளர்: திரு. ஆ. பக்திசுவாலகன்.

(இ) கொல்லிருப்பு (நாயனூர்குப்பம் ஊர்க்கிளை): தொடக்கம்: 8-2-70; தலைவர்: திரு. வெ. செ. திருமாவளவன்; செயலர்: திரு. ந. அ. பன்னீர்ச்செல்வன்; பொருளர்: கொ. இரா. வேலாயுதம்.

திருமுதுகுன்றம் வட்டக்கிளை: தொடக்கம்: 22-3-70; தலைவர்: திரு. பிச்சைமுத்து, அறி. இ., ஆ. ப.; செயலர்: ந. இராமாநந்தம், அறி. இ.; பொருளர்: திரு. பெருந்தேவன்.

### உ. திருச்சி மாவட்டம்

குழிபிறை ஊர்க்கிளை: தொடக்கம்: சுறவம்–க. தலைவர்: திரு. இராம. அன்புவேல், க. இ.; செயலர்: திரு. பொன். மணிமொழி; பொருளர்: திரு. மு. ஆறுமுகம்.

www.thamizham.net - Free E book No 7422

## ௧. சேலம் மாவட்டம்

சார்வாய்ப்புதூர்க் கிளை:தொடக்கம்: மீனம்-உக. தலைவர்: திரு. கு. தமிழன்பன்; செயலர்: திரு. வா. தமிழ்வளவன்; பொருளர்: திரு. பெ. செழியன்.

## ௨. கோவை மாவட்டம்

குளத்துப்பாளையம் ஊர்க்கிளை: தொடக்கம்: மீனம்-௬. தலைவர்: புலவர். திரு. அ. கோவிந்தராசன்; செயலர்: திரு. சா. செகந்நாதன்; பொருளர்: திரு. க. கருப்புசாமி.

## ௩. மதுரை மாவட்டம்

மதுரை நகரக்கிளை (மேற்குப்பகுதி): தொடக்கம்: 22—3—70; தலைவர்: திரு. நா. அழகர்; செயலர்: திரு. பா. இளங்கோ; பொருளர்: (பெயர் அறிவிக்கப்படவில்லை)

## ௪. தஞ்சை மாவட்டம்

திருவையாறு நகரக்கிளை: தொடக்கம்: சுறவம்-௧௯. தலைவர்: புலவர். சா. அடலெழிலன்; செயலர்: திரு. வி. இறையண்ணல்; பொருளர்: திரு. இரா. முகிலன்.

## உ. பிற செய்திகள்

௧. சேலம் மாவட்ட அரிசிப்பாளையம் உலகத் தமிழ்க் கழகக்கிளை தொடக்கவிழா தி. பி. ௨௦௦௧-மீனம் ௯-ஆம் பக்கல் ஞாயிறு காலை 10-மணி யளவில், சேலம் அரசினர் கலைக்கல்லூரி முதல்வர் திரு. பர். கா. மீனாட்சிசுந்தரனார், க. மு; இல. மு; மெய். ஆய். தலைமையில் நடைபெற்றது. சேலம் மாவட்ட அமைப்பாளர் புலவர். திரு. மி. மு. சின்னாண்டார், "உலகத் தமிழ்க் கழகத்தின் நோக்கங்கள்" என்னும் பொருள்பற்றியும், புலவர். திரு. அ. வரதராசனார், "தமிழின் சிறப்பு" என்னும் பொருள்பற்றியும் சொற்பொழிவாற்றினர். செயலாளர் திரு. மலைநாடன் நன்றிகூற, விழா இனிது முடிந்தது.

உ. முகவை மாவட்டப் பறம்புக்குடி உ. த. க. கிளை சார்பில், தி. பி. ௨௦௦௧-மீனம் ௧௫ (29-3-70) ஞாயிறு மாலை 6-மணி யளவில், மொழிப்பேரறிஞர் திரு. ஞா. தேவநேயப் பாவாணரின் பிறந்தநாள் விழா கொண்டாடப்பெற்றது. திரு. சுப இலக்குமணன் தலைமை தாங்கினார். புலவர். திரு. வேழவேந்தன் சிறப்புரை யாற்றினார். திரு. பறம்பை-அறவாழி தலைமையிற் பட்டிமன்றம் நடைபெற்றது.

௩. முகவை மாவட்டச் சித்தனேந்தல் உ. த. க. கிளை சார்பில், தி. பி. ௨௦௦௧ சுறவம் ௨௫-ஆம் நாள் இரவு 8-மணி யளவில், திரு.

www.thamizham.net - Free E book No 7422

பறம்பை. நாகலிங்கனார் தலைமையில் பாவாணர் விழா கொண்டாடப் பட்டது. திருவினர். இரா. இனியவன், கா. முடியரசன், இரா. பூங் குன்றன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர். திருவினர். வயி. அறி வுடைநம்பி, த. முத்துக்குமரன், நா சேதுவேந்தன் ஆகியோர் பாவா ணர் பெருமை பற்றிய தங்கள் பாடல்களை அரங்கேற்றினர்.

௪. தி. பி. உ௦௦௧—மீனம் உ௬-ஆம் நாள் நடைபெற்ற மதுரை வட்டக்கிளையின் தொடக்க விழாவில், பின்வரும் தீர்மானம் நிறை வேற்றப்பெற்றுள்ளது.

"தமிழ் வளர்த்த மதுரை" என்ற தனித்த பெயருடைய இந்நக ரில் தொல்புகழ் கொண்ட தமிழின் தூய்மை கெட்டுவருவதைக் கண்டு "தென்மொழி"யின் இத்திங்கள் இதழ் மிக்க வருத்தத்தைத் தெரிவித் துள்ளது. மதுரைவாழ் உண்மைத் தமிழ் நெஞ்சங்கள். இக்கூற்றை உளம் நொந்து ஏற்றுக்கொள்கின்றன. இந்நிலை நீடிப்பின் தொன்மை, முன்மைப் புகழ்கொண்ட நம்மொழி காலத்தால் அழிக்கப் படும் என்பதை இம்மொழித்தாய் வளர்த்துவிட்ட மக்களுக்கு (குறிப் பாக வணிகப் பெருமக்களுக்கு) அறிவுறுத்த விரும்புகின்றோம். கலப்பு மொழிகளுடன் நகரில் எழுதப்பட்டிருக்கும் வணிகப் பலகை களை மாற்றித் தாய்மொழிக்குத் தூய்மையும் முதன்மையும் தருமாறு மதுரை வணிகப் பெருமக்களை இக்கூட்டம் கேட்டுக்கொள்கின்றது. இதற்கான வினைப்பாட்டை விரைவில், உலகத் தமிழ்க் கழகத்தின் மதுரை வட்டக்கிளை தொடங்க விருக்கின்றது என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

௫. தஞ்சைமாவட்டத் திருவையாறு நகர உ. த. க. கிளை தொடக்கவிழா, பாவாணர் பிறந்தநாள் விழாவுடன் புலவர். திரு. அ. தண்டமிழ்த் தொண்டன் தலைமையில் நிகழ்வுற்றது. மொழிப்பேரறி ஞர் திரு. ஞா. தேவநேயப் பாவணர் அவர்களின் திருவுருவப்படத் தைத் திரு. அ. இளவழகன், க. இ. அவர்களும், காலஞ்சென்ற திரு. அண்ணாதுரை அவர்களின் படத்தைப் புலவர். திரு. மருதமுத்து அவர்களும், தமிழ்க்கடல் மறைமலையடிகளார் படத்தைத் திரு. தமிழி னியன் அவர்களும், பாவேந்தர் பாரதிதாசன் படத்தைத் திரு திருமா லழகு அவர்களும், திரு. ம. பொ. சி. அவர்களின் படத்தைத் திரு. வீர. இளந்திரையன் அவர்களும் திறந்து வைத்தனர். திரு. செ. தமிழ் வேங்கை சிறப்புச் சொற்பொழிவு நிகழ்த்தினர்.

www.thamizham.net - Free E book No 7422

# அறிக்கை எண்: உ. த. க. 2/3/2001.

1. உலகத் தமிழ்க் கழகத்தின் தி. பி. ௨௦௦௧ முதல் ஆட்சிக் குழுக் கூட்டம் மீனம்-௧௪ (ஞாயிறு) அன்று, திருச்சிராப்பள்ளி அசோகா உண்டிச்சாலையில் காலை 10-மணி யளவில், கழகத் தலைவர் மொழிப்பேரறிஞர் திரு. ஞா தேவநேயப்பாவாணர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

அதுபோழ்து மாவட்ட அமைப்பாளர் பலரும் கழகம் இயங்கு வதிலுள்ள நடைமுறைக் குறைபாடுகளைச் சுட்டிக்காட்டினர். பொதுச் செயலாளர் அவற்றிற்கு அமைவு கூறினர். தென்னாப்பிரிக்கத் தமிழர் கட்குத் தமிழறிவு புகட்ட ஆவன செய்ய அரசைக் கேட்டுக்கொள்ளு தல், அமெரிக்க ஒலிபரப்பு நிகழ்ச்சியில் தமிழ் ஒலிபரப்புகட்கு ஏற்பட் டுள்ள தடையை நீக்குமாறு அரசை வேண்டுதல், உ. த க. 2-ஆம் ஆட்டை விழாவைத் திருப்பாதிரிப்புலியூரில் 1970, திசம்பர் இறுதி யில் நடத்துதல் ஆகியவை குறித்த தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன.

பிற்பகல் நிகழ்ந்த நெறியீட்டுக் குழுக்கூட்டத்தில் கிளைக்கழக உறுப்பினர் கட்டணம் உரு 2/- ஆக உயர்த்தும் திருத்தம் மேற் கொள்ளப்பட்டது. (பிற திருத்தங்களும் அறிக்கைகளும் பின்னர் வெளிவரும்).

மே/பா. தென்மொழி
கடலூர்-1.

(ஒப்பம்) பெருஞ்சித்திரன்,
பொதுச்செயலாளர்.

உ. த க. மாவட்ட அமைப்பாளர்க்கு அறிவிப்பு.

அருந்தமிழன்பரீர்,

அண்மையில் நடைபெற்ற ஆட்சிக்குழுக் கூட்டத்திற்கு வரு வார்க்கெல்லாம், போகவர வழிச்செலவுப்பணம் கொடுக்கப்படுமென்று 'தென்மொழி'யில் அறிவிக்கப்பட்டது, செயலாளரின் நினைவுத் தவ றுகவோ, கைத்தவறுகவோ நேர்ந்ததாகும். அன்புகூர்ந்து பொறுத் துக்கொள்க. ஆயின், நண்பகல் உணவு சென்ற ஆண்டிற்போல் ஏற்பாடு செய்யப்பெறுதது பொருளாளர் மறதியே! அதற்குரிய 2 உருபா அன்று வந்தவர்க்கெல்லாம், வருகின்ற ஆட்டைவிழாவில் அளிக்கப்பெறும். பணவிடைத் தாகு வீண்செலவாகுமாதலால் அஞ் சல் வாயிலாக அனுப்பப்படாது.

ஞா. தேவநேயன்,
தலைவர்.

www.thamizham.net - Free E book No 7422

தமிழர் ஒவ்வொருவரின் கைகளிலும், இல்லத்திலும் தவழ்கின்றன. அவற்றின் விலையோ மிகுதி. அவற்றிலுள்ளவையோ அறிவைக் கெடுக்கக் கூடியன. ஆனால் தென்மொழி, தமிழ்ச்சிட்டு அறிவை நன்முறையில் வளர்க்கக் கூடியன. புற அழகிலும், புரட்டு நிகழ்வி லும் காலத்தை வீணாக்கிக் கொண்டிருக்கும் தமிழ் மக்கள் என்றுதான் உண்மை உணர்வை அடையப் போகின்றார்களோ? உங்களின் ஓயா உழைப்பும், உண்மை உணர்வும் ஒருபோதும் வீணாகா. உண்மை நிலைக்கும்! தமிழுக்கும், தமிழர்க்கும் தமிழகத்திற்கும் தாங்கள் ஆற்றி வரும் உண்மைத் தொண்டிற்கு இத்தமிழகமே தலைவணங்க வேண் டும். தலைவணங்கும் காலம் அண்மையிலேதான் உள்ளது. தொண்டு துவளாது தொடரட்டும். தங்களின் நேரிய சீரிய தொண்டு வளர நாங்கள் என்றும் உறுதுணையாக நிற்போம்

–பூம்புகார். மே. வெ. சோமு, சென்னை-21.

0 179: நான் தொடக்கப்பள்ளித் தலைமை ஆசிரியன். இளம் உள்ளங்கட்குத் தென்மொழியின் எழுச்சியும் தமிழ்ச்சிட்டின் அறிவு வளர்ச்சியும் பெரிதும் பயன்படும். உங்கள் பெருந்தொண்டினை ஒரு நாள் அனைவரும் அறிவர். அதுநாள்வரை ஓயாமல் உங்கள் தொண்டு தொடரட்டும். மு. செயராமன், ஆவட்டி, திட்டக்குடி.

0 180: ஆரியர்களின் கொடுமையை, இனிமேலும் நம் இயக் கம் பார்த்துக்கொண்டிருக்க வேண்டா என வணக்கமாய்த் தங்க ளுக்கு அறிவிக்கிறேன். இடியென முழக்கமிட, இன்றே நம்பணி யைத் துவக்குவோம். தனித்தமிழ் தணியாத உள்ளமும், தளராத வேட் கையும், கொள்கையும், குருதியும், நரம்பும், தசையும், எலும்பும், அனைத்தும் தமிழ், தமிழ், தமிழரினம் என முழக்கமிடும் முரசாக ஒலிக்கின்றது. உள்ளத்தில். தங்களின் அறிவுரையும் இசைவும், தேவை ஐயா! –சிவகங்கை மு. ச. அழகேசன், சென்னை-17.

0 181: பேரன்புடையீர், தமிழின் தொன்மைக்கும், தமிழர் களின் உயர்வுக்கும் உண்மையான முறையில் தொண்டாற்றிவரும் "தென்மொழி"க்கு அன்றுதொட்டு இன்றுவரை புறப்பகையும் அகப் பகையும் இருந்து வருவது எம்போன்ற உள்ளங்கள் உணர்ந்த வையே. ஆயினும் இக்கால் உடனிருந்தே ஊறுசெய்யும் நிலையை எண்ணின் நெஞ்சம் வேகின்றது. தென்மொழியையே கருவழித்துவர வேண்டுமென்று அருவருக்கும் செயலில் சில கிண்டற்பித்தர்கள் இறங்கியிருப்பது கிண்டற்குரியதே என்பது எம்போன்ற உண்மைத் தென்மொழி யன்பர்களின் உறுதியான எண்ணமாகும். எனவே, இனி, திங்கள்தொறும் யானும் நண்பர் பசுமலையரசும் ஆக இருவரும் சேர்ந்து கழகப் பொதுக்குழு மற்றும், கருத்தரங்கு போன்றவற்றில் உண்டியல் வைத்து அதன்மூலம் கிடைக்கும் சிறு தொகையாயினும் விடுப்பதென முடிவு செய்துள்ளோம். தலைவர் அவர்களிடமும் இசை வும் பெற்றோம். அதன்மூலம் இப்போது முதல் முறையாக நாங்களே இரண்டு உருபாவை விடுத்துள்ளோம்.

–பொன். மாந்தனரிமா, சி. பசுமலையரசன்–பெங்களூர்-21.

(அடுத்த பக்கம் பார்க்க)

www.thamizham.net - Free E book No 7422

0 182: பாவேந்தருக்குப்பின் தமிழ்த்தாய் எந்தமிழ் உயிர்க்கெல்லாம், இவ்விளந்தமிழ்ச் சிறார்க்கெல்லாம் ஒரு தமிழ்ப் பாவலனை, தனித்தமிழ்க் காவலனை அன்பும் பரிவுமிகு அண்ணனை அளித்துள்ளாள் என்ற உணர்வு என்னுள்ளத்தில் நிறையும்பொழுது, உணர்ச்சி அலைகளால் தாக்குறும்பொழுது, 'தமிழ் இலக்கிய உலகே! போலி அரசியல் கட்சிப் புல்லறிவாளர்களின் கூட்டமாய், உணர்வற்ற விளம்பரப் போலியர்களின் புகலிடமாய், ஓய்ந்து செயலிழந்து கிடக்கின்றாயே'—என்று இற்றைத் தமிழ் இலக்கிய உலகம் இருப்பது கண்டு நாணுவன். கழகத் தமிழ் இலக்கிய மரபில் மலர்ந்த சாகாத இயற்கைப் புலவனை—செந்தமிழ் மறவனை, நந்தமிழ் உயிர்க்குள் உயிர்க்கும் நந்தமிழ்ப் பேரண்ணல் பாவாணர் தலைமையில், உரங்கொண்டு, திறத்தோடு நிமிர்ந்து உயர்ந்த தமிழ் நெஞ்சத்தை-இன்னும் இத்தமிழ்த்தாய் மக்கள் அறிந்திலரே! மலை குலைந்தாலும் மனம் குலையாது குன்றாக அன்றோ உயர்ந்துள்ளீர்!

—அன்புத்தென்றலன், முருகம்பாளையம், திருப்பூர்.

0 183: தண்டமிழ்த்தலைவ! வணக்கம். மொழிக்கொள்கைபற்றி ஆளுக்கொரு மூலையில் நின்று அறைகூவிக் கொண்டிருக்கிறார்கள். இப்படிக் கூறிக்கொண்டிருக்க இதுவா நேரம்? வெட்டு ஒன்று துண்டு இரண்டுபோலப் பேசி உடனடியாகத் தமிழகத்தை விடுதலை பெறச் செய்தல் வேண்டும். முதலமைச்சர் கூறியுள்ள மாநிலத் தன்னாட்சிக் கொள்கையைப் பாராட்டுகிறேன். அந்தக் கட்சி தனது முந்தைய கொள்கையை மண்ணில் போட்டு மூடியதுபோல இதையும் மூடாதிருக்க வேண்டும். விரைவில் வெற்றிகொள்ள, வெள்ளம்போலப் படை வேண்டும். வீறிட்டெழுந்து குரல்கொடுக்க ஆயிரக்கணக்கான மாணவர்கள் இருக்கிறோம். விரைவில் விடுதலைப்படை அமைக்க! அதில் கலந்துகொள்ளத் துடிக்கும் மறத்தமிழன்,

—சுப. சுப்பையா, (தென்னவன்) கீழைச்சிவற்பட்டி.

0 184: தமிழர் தம் தோணியே! பொய் சுடர்விட்டு எரியும் காலத்தில் உண்மை என்ன செய்யும்? போலியும், ஏமாற்றலும், பகட்டும் மலிந்து விலைபோகும் இந்நாளில் உண்மையும், நேர்மையும், எளிமையும் மங்கித்தான் கிடக்கின்றன. எங்ஙனம் இருந்த தமிழ் நாடு, தமிழர், தமிழ்—எத்துணைச் சீர்கேடான நிலைக்கு வந்துவிட்டன. பார்த்தீரா? வெட்கம், துயரம்! நெஞ்சில் குருதி கொப்பளிக்கிறது. நான் என்ன எழுதுவது என்றே தெளியாமல் இருக்கிறேன். ஒவ்வொரு தமிழன் முகத்தினையும் நோக்குகிறேன். அம்முகங்களில் வள்ளுவனின் தெளிவோ, இளங்கோவின் சாயலோ, செங்குட்டுவனின் மறமோ, நக்கீரனின் துணிவோ ஒன்றும் காணேன். எல்லாரிடமும் மொழிப்பற்று, இனப்பற்று, நாட்டுப்பற்று இல்லாத தன்னல வாழ்வின் பரபரப்பு, பார்ப்பன அடிச்சுவடுதான்! அய்யா! நான் தங்கட்குப் பக்கம் பக்கமாகத் தமிழ்நாட்டில் மலிந்துள்ள சீர்கேடுகளை எழுதத் துடிக்கிறேன். மனம் தளர்ந்து அடங்குகிறேன். தமிழே என் உயிர். தமிழ்த்தாயே என் தெய்வம். தமிழ்ப்பணி செய்யும் தங்களின் வழியே என்வழி.

—கரிகால்வள்வன், கலவை. வ. ஆ.

தென்மொழி மின் அச்சகம், கடலூர்-1,

www.thamizham.net - Free E book No 7422